கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

185
2.5

குடும்பப் பத்திரிகைகள்

கலைமகள்

- மணிக் கணக்காக உட்கார்ந்து,
சுவாரஸ்யமாகவும் உபயோக
மாகவும் படிக்கக்கூடிய கதை
களும் கட்டுரைகளும் புதிய தொடர்கதைகளும்
நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ்
மணத்தை அவர்களுக்கு வாரி வழங்கும் மாதப்
பத்திரிகை.

வருஷ சந்தா ரூ. 6/-

மஞ்சரி

- நாட்டின் பல பாஷைகளில் வெளி
யாகும் நூற்றுக்கணக்கான பத்திரி
கைகளிலிருந்து சிறந்த விஷயங்
களைப் படித்து ஆராய்ந்து, பற்பல ருசியும் பயனும்
மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது மஞ்சரி
ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும்
வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4/8-

கண்ணன்

- ஐந்து முதல் பதினைந்து
வயது வரையுள்ள உங்கள்
செல்வக் குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதை
களும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும்
அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்
களும் நிறைந்தது.

வருஷ சந்தா ரூ. 3/-

தபால்பெட்டி 604 * மயிலாப்பூர் * சென்னை, 4.

தீபாவளி மலர்களின் விலை தனி.

மூன்று பத்திரிகைகளின் சந்தா ரூ. 13/8 ஆகிறது.

மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தாவுக்கு ரூ. 12/- அனுப்பினால் போது

[stamp] ... APR 1953

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 12

டிஸம்பர் '52

குழந்தைகளே !	பக்கம் ..	2
அன்பின் அடிமை - ரா. நா.	.. ..	3
டெலிவிஷன் - புரொபஸர் விஞ்ஞானம்	..	9
நந்துவின் ராக்கெட் பாம் - ஆர்வி	.. ..	13
பொறுப்பு - ஈசாப் கதை	.. ..	17
பன்மொழிப் புலவர் - எஸ். வி. ஆர்.	.. ..	18
ஒரு நாள் அரசன் - வி. எஸ். விஜயா	..	21
யார் ஏமாந்தது? - ரங்கநாயகி	.. ..	25
வெற்றி - 'எனெஸ்'	.. ..	31
இதோ ஒரு பரிசு! - எம். எஸ். எஸ்.	.. ..	34
தலையணைக்கடியில் - 'எல்கே'	.. ..	36
அணில் - 'ரமணன்'	.. ..	37
தங்கக் கடிகாரம் - கே. வி. எஸ். மணி	..	38
வளைய விளையாட்டு - 'சுகுமார்'	.. ..	42
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	.. ..	43
அபாயச் சங்கு - 'நீலம்'	.. ..	45
வீரர் வினு மன்காட்	.. ..	49
வெண்ணெய் மாளிகை - திருச்சி அண்ணா	..	51
கேட்டீர்களா !	.. ..	55
புதிவாரிசை	.. ..	56

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

கண்ணனுக்கு இந்த இதழுடன் மூன்று ஆண்டு நிறைகிறது. வருகிற ஜனவரி இதழிலிருந்து நாலாவது ஆண்டு தொடங்குகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கண்ணன் ஆரம்பமானதிலிருந்தே உங்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு, பல துறைகளிலும் விஷயங்களைச் சேகரித்துக் கண்ணனில் வெளியிட்டு வந்திருக்கிறோம். இந்த மூன்று ஆண்டுகளில் குழந்தைகளுக்காக உருவாக என்ன செய்திருக்கிறோம் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்வதே ஒரு ருசிகரமான காரியம் அல்லவா? இதுவரை மொத்தம் அற்புதமான 8 தொடர்கதைகளும் ஒரு சித்திரத் தொடர்கதையும் தனியாக வந்திருக்கிறது. மூன்று தீபாவளி மலர்கள் வந்துள்ளன. லெஜண்டு என்று சொல்லப்படும் புனை கதைகள் 16 கதைகளுக்கு மேல் வந்திருக்கின்றன. பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு, மிருகங்கள், பட்சிகளின் வாழ்க்கை, பல தேசத்துச் சிறுவர்களைப் பற்றிய விவரங்கள், அருமையான பல பாடல்கள், சிறந்த எழுத்தாளர்களின் கற்பனைக் கதைகள், கட்டுரைகள், விஞ்ஞானத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி செய்யும் சித்திரக் கட்டுரைகள், வேடிக்கை விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். மூன்று வருஷங்களையும் சேர்த்து, கண்ணன் குழந்தைகள் செலுத்தியுள்ள சந்தாத் தொகை ரூ. 9/- தான் ஆகிறது. ஒன்பது ரூபாய்ப் பணம் கண் மூடிக் கண் திறப்பதற்குள் கண்ட செலவுகளில் செலவாகி விடும். ஆனால் இந்தத் தொகைக்கு நீங்கள் பெறவேண்டும் என்று நாங்கள் பாடுபட்டுத் தந்த விஷயங்களோ அற்ப சொற்பமானவையல்ல.

எல்லாம் சரி; இனிப் புத்தாண்டில் கண்ணன் என்ன செய்யப் போகிறுன் என்பதே கேள்வி அல்லவா? அதையும் சுருக்கமாக ஓரளவுக்குள் சொல்லிவிடுகிறேன்.

வழக்கமான அம்சங்களுடன் இன்னும் சில புதிய விஷயங்களைக் கண்ணனில் சேர்க்க எண்ணியிருக்கிறோம். புரொபஸர் விஞ்ஞானம் என்ற பெயரினுள் ஒளிந்துகொண்டிருந்த ஆசிரியர் பெ. நா. அப்புஸ்வாமி அவர்கள் ஒரு புதிய கட்டுரைத் தொடரை ஆரம்பிக்கிருர். அதன் படங்களே உங்களைப் பிரமிக்க வைக்கும். அன்பின் அடிமை என்ற தொடர்கதை முடிந்ததும் மற்ருெரு புதுமையான தொடர் கதை வரப்போகிறது. இதுவரை அத்தகைய தொடர் கதையை நீங்கள் படித்திருக்கவே முடியாது. அப்படிப்பட்டது. கண்ணன் தபால் பகுதியில் நீங்கள் சுவையான அறிவு வளர்ச்சிக்கான கேள்விகளைக் கேட்டால் அவைகளைப் பிரசுரித்து அதற்கு ஆசிரியர் விடையும் தருவார். இவ்விதமாக 1953-ஆம் ஆண்டில் கண்ணன் பலவகையிலும் புதுமையுடன் ஜொலிக்கும்.

ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

அன்பின் அடிமை

ரா. நா.

கனும் அந்த அழகியின் முகத் திரையில் மீண்டும் எழுதியிருந்ததைப் படித்தான்:

"அல்லாவின் சந்ததியே, உனக்கு நான் உரியவன். எனக்கு நீ உரியவள்."

இதைப் படித்தவுடன் இவள் தன் மனைவியாக முடியாது என்று கனும் புரிந்து கொண்டான். இவள் முஸ்லிம் மதகுரு (கலீபா) வான ஹருன் அல் ரஷித்தின் அன்புக்கு மிகவும் பாத்திரமான பெண்மணி என்பதே அதற்குப் பொருள். உடனே கனும், "நான் மிகவும் துரதிருஷ்டசாலி. ஏனெனில் எனக்கு எட்டாத ஒரு பொருளுக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன். அது கிடக்கட்டும். உன் கதையைச் சொல். உனக்கு எவ்விதத்தில் உதவி செய்ய முடியும் என்பதைப் பற்றி முடிவுகட்ட வேண்டும்" என்று கூறினன்.

"அன்பரே! என் பெயர் பதிமா. என்னுடைய பயிற்சியும் என் முக லட்சணங்களும் கலீபாகான் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. அவருடைய அரண்மனையிலுள்ள பெண்களில் என்னிடமே அவர் அதிகமாக ஆசையாயிருக்கிருர். எனக்கு இந்தப் பதவி கிடைத்ததால் என்னைக் கண்டு பலர் பொருமைப்படலாம். ஆனல் என் அழகே எனக்கு ஆபத்தாயிருக்கிறது. கலீபா என்னிடம் பிரியமாயிருப்பது அவருடைய பிரதம ராணி ஜுபேதாவுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணிவிட்டது. அவள் எனக்கு எவ்வளவோ தீங்கு செய்துவருகிருள். நேற்று என் உயிரை வாங்கவே திட்டம் செய்தாள். நீங்கள் தலையிடாமல் இருந்தால் என் உயிர் போயிருக்கும். கலீபா தம் எதிரிகளை அடக்குவதற்கு வெளியூர் சென்றிருக்கிருர். அவர் இல்லாதபோது என்னை ஒழித்துவிட ஜுபேதா, திட்டமிட்டாள். எலுமிச்சம் பழரஸத்தில் ஒரு மயக்க மருந்தைக் கலந்திருப்பாள் போலிருக்கிறது. அதை நான் குடித்துவிட்டேன். அதன் காரணமாக நான் தூங்கியிருக்கிறேன். அந்தச் சமயம் பார்த்துச் சில அடிமைகளைக் கொண்டு என்னை ஒரு பெட்டியில் போட்டு மூடிப் புதைத்துவிடும்படி அனுப்பியிருக்கிருள். தெய்வாதீனமாக நீங்கள் பார்த்து என்னைக் காப்பாற்றியிருக்கிறீர்கள்" என்ருள் பதிமா.

அந்தப் பெட்டியைச் சுமந்து வந்தவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதிலிருந்து இந்தக் கொடிய காரியத்தை ராணி ஜுபேதாதான் செய்திருக்க வேண்டும் என்று கனும் நம்பினன். ஆகையால் அவளுக்கு வேறு எவ்வித ஆபத்தும் நிகழாமல் காப்பாற்றுவதாக வாக்களித்தான்.

சுவை மிகுந்த விருந்து பதிமாவுக்கு அளிக்கப்பட்டது. விருந்து சாப்பிட்டுவிட்டு, கொஞ்ச நேரம் அவளும் கனுமும் பாடிக்கொண்டிருந்தனர். பாட்டு முடிந்ததும்,

அவளைச் சற்று இளைப்பாறச் சொல்லிவிட்டு, அவள் தங்குவதற் கான ஏற்பாடுகளைச் செய்ய, கனும் வெளியே சென்றான். முதலில் அவளுக்குப் பணிவிடை செய்ய இரு பெண் அடிமைகளை அமர்த்தி னன். பதிமா அணிந்து கொள்வ தற்கு விலை உயர்ந்த ஆடைகள் வாங்கினன். இவைகளைப் பதிமா விடம் கொடுத்தவுடன் அவள் சந் தோஷம் தாங்காமல் அவனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தாள். கலீபா திரும்பி வரும் வரையில் கனுமின் வீட்டில் அவள் மறைவாக இருக்கவேண்டும் என முடிவு செய் தான். கலீபா வந்தவுடன் பதிமா வின் விஷயத்தை எப்படித் தெரி விப்பது என்பதுபற்றிப் பின்னர் யோசித்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

இவ்வாருகப் பல வாரங்கள் கழிந்தன. பதிமாவின்மீது கனு மின் ஆசையும் வளர்ந்துகொண்டே வந்தது. பதிமாவிற்கும் கனும்மீது அன்பு அதிகமாகிக்கொண்டுதான் வந்தது. ஆனல் பதிமா கலீபா வுக்குச் சொந்தமானவள் என்பது அவர்கள் இருவருக்கும் தெரியு மாகையால் அவர்களுடைய ஆசை பூர்த்தியாவதற்கு வழியில்லாமல் இருந்தது.

இதற்கிடையில் கலீபாவின் ராணிக்குக் கவலை அதிகரித்தது. பதிமாவிடம் கலீபாவுக்கு அள வற்ற ஆசை உண்டு என்பதை அவள் அறிவாள். கலீபா திரும்பி வந்ததும் பதிமா எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல் வது என்று ராணி கவலையடைந் தாள்.

தனக்குப் பழக்கமான ஒரு கிழ வியை வரவழைத்து அவளுடைய யோசனையை ராணி கேட்டாள். திடீரென நோய்கண்டு பதிமா இறந்துவிட்டாள் என்று கலீபா நம்புவதற்கு வழி செய்யவேண்டும். அதற்குரிய வழியையும் கிழவி கூறினள்.

“பதிமா மாதிரி மரத்தினல் செய்யவேண்டும். அந்த உருவத் தைத் துணியால் நன்ருகச் சுற்றி ஒரு சவப்பெட்டியில் வைத்து மூடி அரண்மனைத் தோட்டத்தில் புதைத்துவிடவேண்டும். அந்தச் சமாதியின்மீது சலவைக்கல் கட்டி டம் கட்டவேண்டும். அந்தச் சமாதி யின்மேல் கறுப்புத் துணியால் மூடிவிடவேண்டும். சமாதியைச் சுற்றிப் பெரிய மெழுகுவத்திகள் எரிந்துகொண் டிருக்கவேண்டும். பதிமா கொடிய நோயினல் திடீ ரென இறந்துவிட்டாள் என்று அறிவித்து அவளுக்காகத் தர்பாரி லுள்ளவர்கள் துக்கம் காக்கும் படி அறிவிக்க வேண்டும். கலீபா திரும்பி வந்தவுடன் இதைக் கேட்டால் பதிமா இறந்து விட்டதாக நம்பமாட்டார். நீதான் அவளைப் பொருமையால் கொன்று விட்டாய் என்று நினைப்பார். ஆகையால் சமாதியை உடைத்துப் பார்க்க உத்தரவிடுவார். உள்ளே சவப்பெட்டியும் அதனுள் மூடிய உடலும் இருப்பது கண்டு அது பதிமாவின் உடல் என்று நம்பிவிடு வார். அப்புறம் நீதான் அவளைக் கொன்றுவிட்டாய் என்று நினைக்க மாட்டார்.”

இந்த யோசனையைக் கேட்டு ஜுபேதா சந்தோஷம் அடைந் தாள். உடனே அந்தக் கிழவியைக் கட்டித் தழுவிக்கொண்டு அவ ளுக்கு வைரம் ஒன்றைப் பரிசாக அளித்து அனுப்பினள்.

மரச்சவம், சவப்பெட்டி எல்லாம் தயாராயின. பதிமா திடீரென இறந்துவிட்டதாக ராணி தன் ஆட்களைக் கொண்டு அறிவித்தாள். தர்பாரிலுள்ளவர்கள் யாவரும் ராணியின் உத்தரவுப்படி துக்கம் காப்பதற்கு ஆரம்பித்தனர்.

சவப்பெட்டி அரண்மனைத் தோட்டத்தில் அடக்கம் செய்தார்கள். அதன்மீது அழகிய ஞாபகச் சின்னம் எழுப்பினார்கள்.

மூன்று மாதங்கள் ஆயின. கலீபா வெற்றிக் கொடிகளுடனும் வாத்திய முழக்கங்களுடனும் பாக்தாதுக்குள் பிரவேசித்தான். ஆனால் அரண்மனைக்குள் நுழைந்தவுடன் பிரபுக்களும் சீமாட்டிகளும் துக்கத்திலிருப்பதைக் கண்டு பிரமித்துப்போனான். அவனை எதிர் கொண்டழைக்க ராணி வந்தாள். பதிமாவின் திடீர் மரணத்தைப் பற்றியும் சவ அடக்கத்தைப் பற்றியும் துக்கம் தாங்காமல் தெரிவித்தாள். பதிமாவுக்கு அழகிய ஞாபகச் சின்னம் எழுப்பியிருப்பதைப்பற்றிக் கலீபாவிடம் சொல்ல ஜுபேதா மறக்கவில்லை.

துக்கம் நெஞ்சை அடைக்க, கலீபா பதிமாவின் சமாதியை நோக்கிச் சென்றான். அங்கே மிகவும் அழகிய சலவைக் கல் ஞாபகச் சின்னம் இருப்பதைக் கண்டு ஜுபேதாவின்மீது சந்தேகம் கொண்டான். ஜுபேதா தன் எதிரியான பதிமாவுக்கு இவ்வளவு உயர்ந்த சின்னம் எழுப்புவதாயிருந்தால் அதில் ஏதோ சூதிருக்க வேண்டும் என்று கலீபா எண்ணினான். பதிமாவை எங்கேயோ மறைத்து வைத்துவிட்டு, அவள்

இறந்துவிட்டாள் என்று தான் நம்புவதற்காக ஜுபேதா இம்மாதிரி உயர்ந்த ஞாபகச் சின்னத்தை எழுப்பி யிருக்கவேண்டும் என்று கலீபா கருதினன்.

உண்மையை அறிந்துகொள்ளக் கலீபா, அந்தச் சமாதியைத் திறந்து சவப்பெட்டியை வெளியே எடுக்கச் செய்தான். பெட்டியைத் திறந்தவுடன் சவம் துணியால் மூடப்பட்டிருந்ததைக் கண்டான். உள்ளிருப்பது பதிமாவின் சவம் என்று நினைத்துக்கொண்டு வருத்தம் தாங்காமல், ஜுபேதா உண்மையைத் தான் கூறியிருக்கிறள் என்று நம்பினன்.

சமாதியை மறுபடியும் மூடச் சொல்லிவிட்டுப் பதிமாவுக்காக ஒரு மாதகாலம் எல்லா மசூதிகளிலும் பிரார்த்தனை நடத்தும்படி உத்தரவிட்டான். அவனும் பிரபுக்களும் தினம் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர். ஒரு மாதம் பதிமாவுக்காகத் துக்கம் காத்ததனல் கலீபா மிகவும் களைத்திருந்தான். ஆகையால் சர்தடியில்லாத அறையில் சென்று படுத்து நன்ருகத் தூங்கிவிட்டான். கலீபா தூங்குகையில் அவனுக்கு விசிறுவதற்கு இரண்டு பெண்கள் உண்டு. அவர்கள் தங்களுக்குள் ரகசியமாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சுச் சத்தம் கேட்டுக் கலீபா விழித்துக்கொண்டான். உடனே அவர்களைப் பார்த்து, “தூங்குகையில் என் இப்படிச் சள சளவென்று பேசுகிறீர்கள்?” என்று கடிந்துகொண்டான். அதற்குத் தோழிகளில் ஒருத்தி, “நாம் நினைத்தமாதிரி பதிமா இறந்து போகவில்லை. உயிருடனிருப்பதோடு சௌக்கியமாகவும் இருக்கிருராம். இதோ பாருங்கள்! அவர் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிருர்” என்று கூறி ஒரு கடிதத்தைக் கலீபாவிடம் கொடுத்தாள்.

பதிமா அந்தக் கடிதத்தில் ராணி தனக்குச் செய்த தீங்கையும் கனும் காப்பாற்றியதையும், அவன் தனக்கு எல்லாவிதச் சௌகரியங்களும் செய்து கொடுத்திருப்பதையும் விவரித்திருந்தாள். தன் ஆசைநாயகியைக் காப்பாற்றியதற்குக் கனுமுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக, அவன்மீது பொருமைகொண்டு ஆத்திரமடைந்தான் கலீபா. கனுமை ஒழித்துவிட்டு, தன்னை மறந்த பதிமாவையும் கடுமையாகத் தண்டிக்கப் போவதாகச் சபதம் செய்தான். உடனே தன் முதல் மந்திரியான கபூரை அழைத்து, “நானூறுபோர் வீரர்களை அழைத்துக்கொண்டு கனுமின் வீட்டைக் கொளுத்துங்கள். அந்தப் பயல் கனுமையும் பதிமாவையும் இங்கே இழுத்து வாருங்கள். அவர்களுக்கு என்ன தண்டனை விதிக்கிறது என்று பின்பு கூறுகிறேன்” என்று கட்டளையிட்டான்.

மந்திரி கபூரும் நானூறு வீரர்களும் வருவதைப் பதிமா ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டாள். இவர்கள் போர்க்கோலமாக வருவது பதிமாவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. தன் கடிதம் கண்டு கலீபா கோபமடைவான் என்று பதிமா எதிர்பார்க்கவில்லை. கலிபாவின் பொருமையை அவள் அறிந்துகொண்டாள். உடனே அவள் கனுமிடம், “நம் இருவரையும் ஒழித்துவிடக் கலீபா ஏற்பாடு செய்துவிட்டார் போலிருக்கிறது.

ஆகையால் ஒரு நிமிஷம்கூடத் தாமதம் செய்யாமல் ஓர் அடிமை மாதிரி உடைத் தரித்துக்கொண்டு ஏதோ தின்பண்டம் எடுத்துச் செல்பவன் மாதிரி நீங்கள் வெளியேறிவிட வேண்டும். உங்களை வேலையாட்களில் ஒருவன் என்று நினைத்து முதல் மந்திரி விட்டுவிடுவார். 'கனும் உள்ளே இருக்கிருனு?' என்று உங்களைக் கேட்டால், 'ஆமாம், இருக்கிருன்' என்று கூறிவிட்டுச் சீக்கிரம் நீங்கள் தெரு வழியே சென்றுவிடுங்கள்'' என்று யோசனை கூறினுள்.

ஆனுல் கனும், ''ஐயோ! உன்னை இப்படி ஆபத்தில் விட்டு விட்டு நான் எப்படிச் செல்வேன்?'' என்று துயரத்துடனும் பயத்துடனும் கேட்டான்.

அதற்குப் பதிமா கூறினுள்:

''எனக்காகப் நீங்கள் பயப்பட வேண்டாம். கலீபா என்னை நம்பும்படி செய்துவிடுவேன். ஆனுல் உங்கள்மீதுதான் அவர் கோபம் அதிகமாய் இருக்கிறது. நீங்கள் தப்பிச் செல்லாவிட்டால் உங்களை அவர் கட்டாயம் கொன்று விடுவார். உங்கள் சொத்துக்களையும் பணத்தையும் நான் பத்திரமாகப் பாதுகாக்கிறேன். கலீபாவின் கோபம் தணிந்தபின் நீங்கள் முன்போலவே உங்கள் சொத்தை அநுபவிக்கலாம்.

இவ்வாறு சொல்லிவிட்டுப் பதிமா கனுமுக்கு அடிமை உடை அணிவித்து முகத்திற்கும் கைகளுக்கும் சாயம் பூசினுள். துயரம் தோய்ந்த உள்ளத்துடன் பதிமாவிடம் விடைபெற்றுக் கனும் தலையில் சில உணவுத் தட்டுக்களைச் சுமந்துகொண்டு வெளியேறினுன்.

மந்திரி உள்ளே சென்று பதிமாவைப் பார்த்து, "கனும் எங்கே?" என்று கேட்டான். "அவன் தன் சொந்த ஊராகிய டமாஸ்கஸ்ஸுக்குச் சென்று ஒரு மாதம் ஆகிறதே" என்று பதில் கூறினுள் பதிமா. அரண்மனைக்கு வரவேண்டும் என்று மந்திரி கூறியதும் உடனே வருவதாக அவள் ஒப்புக்கொண்டாள். தன்னுடன் கனுமின் துணிகள் அடங்கிய பெட்டியையும் பணப் பெட்டியையும் எடுத்து வர அனுமதி கேட்டாள். மந்திரி சம்மதிக்கவே அவைகளையும் எடுத்துக்கொண்டு பதிமா போர்வீரர்களைப் பின் தொடர்ந்தாள். அரண்மனை சென்றால் கலீபாவின் மனத்தை மாற்றிவிடலாம் என்று நம்பினுள்.

கலிபாவின் உத்தரவுப்படி, கனும் இருந்த வீட்டிற்குப் போர் வீரர்கள் தீயிட்டார்கள்.

அரண்மனையை அடைந்ததும், நடந்த விஷயங்களைக் கலீபாவிடம் முதல் மந்திரி கூறினுன். கனும் இல்லை என்றதும் கலீபாவுக்கு அடங்காத கோபம் மூண்டது. பதிமாவைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; பேசவும் இல்லை. அரண்மனையிலுள்ள இருளடைந்த மண்டபத்தில் அவளைப் போட்டுப் பூட்டிவிடும்படி கட்டளையிட்டான்.

இப்படி நேரும் என்று பதிமா எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய சமாதானத்தைக் கலீபா ஏற்றுக்கொள்வார் என்றே எண்ணினுள். ஆகையால் அவளை இருண்ட மண்டபத்தில் தள்ளி அடைத்ததும் அவள் துக்கமடைந்தாள்.

பதிமாவைத் தண்டித்ததும் கலீபா தன்னுடைய சிற்றரசனுன ஸிரியா மன்னன் ஜுபிக்கு ஒரு கடிதம் எழுதினுன். ஸிரியா தேசத்தில்தான் கனுமின் சொந்த ஊராகிய டமாஸ்கஸ் இருந்தது. ஜுபிக்குக் கலீபா எழுதிய கடிதத்தில் கனும் செய்த கொடுமைகளை விவரித்து, அவனை உடனே பிடித்து விலங்கிட்டு, நன்ருக அடித்து, மூன்று நாட்களுக்கு அவனை நகரில் வலம் வரச் செய்ய வேண்டும் என்றும், அவனை அழைத்துச் செல்லுகையில் அவனுக்கு முன்னுல் ஒருவன், "கலீபாவுக்குத் துரோகம் செய்தவனுக்கு இதுதான் சரியான தண்டனை" என்று அறிவிக்கும்படியும் குறிப்பிட்டிருந்தான்.

இது தவிர, கனுமின் வீட்டுக்குத் தீ வைக்கும்படியும் கனுமின் பெற்ருேர், தங்கை தம்பிகள் இருந்தால் அவர்களுக்குக் குதிரை மயிரினுல் தயாரித்த ஆடைகளை அணிவிக்கும்படியும், மூன்று நாட்களுக்கு அவர்களைத் தெருவில் விரட்டியடிக்கும்படியும், அவர்களுக்குத் தங்குமிடமோ உணவோ யாரும் அளிக்காமல் தடுக்கும்படியும் ஸிரியா மன்னனுக்குக் கலீபா கட்டளையிட்டிருந்தான். கலீபாவின் கடிதத்தை ஜுபி படித்தவுடன் அவ்வாறே நடக்கத் தயாரானுன்.

(தொடரும்)

டெலிவிஷன்

புரொபஸர் விஞ்ஞானம்

டெலிவிஷன் படம் பிடித்தல்


3
முதலில் ஒன்று சொல்லுகி
றேன் ரேடியோவில் பாடகன்
பாடும்போது உன் வீட்டு
ரேடியோ செட்டில் அந்தப்
பாட்டைக் கேட்கிறாய்.
டெலிவிஷனில் எப்படியென்
றால் பாட்டைக்கேட்பதோடு
பாடுபவனையும் உன்னால்
வீட்டிலிருக்கும் செட்டிலேயே
பார்க்கலாம்.
4
பாட்டை எப்படி ஒலி பரப்புகிறார்கள்
என்பது தெரியும். படத்தை எப்படி ஒளி
பரப்புகிறார்கள் என்பதைச் சொல்லுங்கள்.
டெலிவிஷனுக்காகப் படம் பிடிக்க ஒரு
நலிக் காமிரா இருக்கிறது. அதில் பிலிம் சுருளுக்குப்
பதிலாக ஒளி மின்சாரக் கலங்கள் (Photo-Electric cells
உள்ள ஒரு திரை இருக்கிறது. காமிரா லென்ஸின்
வழியாகப் பாடுபவனின் பிம்பம் அந்தத் திரையில்
விழுகிறது. பாட்டில் ஒலி உரக்கவோ மெதுவாகவோ
இருப்பதுபோல படத்தில் ஒளி பிரகாசமாகவோ மங்க
லாகவோதான் இருக்கும். இந்த ஒளி வித்தியாசத்துக்கு
ஏற்றபடி அந்தத் திரையிலுள்ள மின்சாரக் கலங்கள்
மின் ஓட்டங்களை (Electric-currents)
இயற்றுகின்றன. இந்த மின் ஓட்டங்கள் மிகவும்
பலவீனமானவை ஆகையால் இவற்றைப் பல
ஆயிரம் மடங்கு அதிகச் சக்தியுள்ளவைகளாக
மாற்றிக் கொள்கிறார்கள். பிறகு அந்த ஓட்டங்களை
மின் அலைகளாக மாற்றி ஏரியல் மூலம் டெலிவிஷன்
நிலையங்களிலிருந்து பரவச் செய்கிறார்கள்.

டெலிவிஷன் காமிராவுக்கு எமிட்ரான் (Emitron) காமிரா என்று பெயர். இதில் படங்கள் வரிவரியாக ஒன்றன் பின் ஒன்றாகப் பதிவாகின்றன. இந்தக் கோடுகள் அதி விரைவாகப் பதிவாவதால் படம் கோடுகளாகத் தோன்றாமல் முழுப் படமாகவே தெரிகிறது.
5
எமிட்ரான் காமிரா (Emitron)
6
படம் பிடிப்பதைப் பற்றித் தெரிந்து கொண்டோம். படம் நமக்கு எப்படித் தெரியும்படி செய்கிறார்கள்?
ரேடியோவுக்கு ரிஸீவர் இருப்பது போல டெலிவிஷனுக்கும் ஒரு ரிஸீவர் உண்டு. ரேடியோ ரிஸீவரில் உள்ள ஒலிபெருக்கிக்குப் பதிலாக இதில் காதோட் (Cathode Ray tube) கிரணக் குழாய் இருக்கிறது. இந்தக் குழாயின் அகன்ற புறத்திலுள்ள திரையில் படம் தெரியும். டெலிவிஷனில் போட்டோ, ரேடியோ, ஸினிமா இவற்றின் முறைகள் மூன்றும் ஐக்கியமாகியுள்ளன.
காதோட்
கிரணக்குழாய்
ஒளி மின்சாரக்
கலம்
டெலிவிஷன் வரிப்படம்

பேர்டு (BAIRD)

இதைக் கண்டுபிடித்தவர் (Baird) பேர்டு என்பவர். இவர் ஸ்காட்லந்து தேசத்தைச் சேர்ந்தவர். முதல் முதலாக 1925-ஆம் வருஷம் டெலிவிஷன் காட்சி நடைபெற்றது. பின்பு ஆண்டர்சன், ஜென்கின்ஸ், சுவாரிக்கின் முதலிய பலர் பல அபிவிருத்திகளைச் செய்தார்கள். முதலில் டெலிவிஷனில் இயற்கை வர்ணக்காட்சிகளைக் காட்ட முடியவில்லை. இப்பொழுது அதுவும் ஓரளவு சாத்தியமாகிவிட்டது.

டெலிவிஷனை ஏற்படுத்துவதற்கு ஏராளமான செலவு ஆகிறது. மேலும் சாதாரணமாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து இருபத்தைந்து மைலுக்கு அப்பால் காட்ட முடிவதில்லை. ஆகையால் அமெரிக்கா முதலிய இடங்களிலேயே இன்னும் அதிகமாகப் பரவவில்லை. ஐந்து மைல் உயரத்தில் விமானத்தை ஒரே இடத்தில் நிற்கும்படி செய்து, அங்கிருந்து ஒளி பரப்பினால் இருநூறு மைல்வரை டெலிவிஷனைக் காட்ட முடியும். அதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. இப்பொழுது தண்ணீருக்குள் மூழ்கிய கப்பல்களையும் வாழும் மீன்களையும் டெலிவிஷன் மூலமாகப் பார்க்க முடிகிறது. இதை மலிவாக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. எனவே நம் நாட்டிற்கும் டெலிவிஷன் விரைவில் வந்துவிடும்.

டெலிவிஷன் பெட்டி


அலெக்ஸாண்டிராவிலுள்ள டெலிவிஷன் நிலையம்

நந்துவின் ராக்கெட் பாம்

ஆர்வி

மாமா சொல்கிறார்:

எனக்கு இருந்தாற்போலிருந்து தூக்கி வாரிப்போட்டது. அமெரிக்கர்கள் நாகசாகியில் அணுக்குண்டு போட்டதுபோல ஒரு பெரிய வெடிச் சத்தம் என் காதைப் பிளந்தது. அது ஓய்வதற்குள்ளே அந்தச் சத்தத்தையும் தூக்கியடிப்பதுபோல நந்துவின் சிரிப்பும் அவன் தோழர்களின் தவளைக் கத்தலும் கேட்டன.

எனக்கு ஒரே எரிச்சலாக வந்தது. என்னை நிம்மதியாகத் தூங்க விடுகிறார்களா இந்த வாண்டுப் பயல்கள்? நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு கொட்டாவி விட்டேன். தடதடவென்று யாரோ, 'கூ, குப், ..குர்...கு' என்று ரெயிலும் பஸ்ஸும் சேர்ந்து வருவதுபோல ஏறி வருவது தெரிந்தது. வேறு யார்? எல்லாம் என் மருமான் நந்துப் பயல்தான்!

"என்னடா நந்தருணி! என்ன ரகளைடா கீழே? தீபாவளி முடிந்த பின்னும் கட்டிடத்தை யெல்லாம் இடிச்சுடுவே போலிருக்கே?" என்று கோபத்தோடு ஆரம்பித்தேன்.

காபி சாப்பிடக் கூப்பிட வந்தானோ, அல்லது ராக்கெட் பாம் வாங்கக் காசு கேட்க வந்தானோ தெரியவில்லை! சட்டென்று முக பாவத்தை மாற்றிக்கொண்டான். கணித மேதை ராமானுஜமாக ஒரே நிமிஷத்தில் மாறினான். எனக்குக் கணக்கு என்றால் இப்பொழுது பொறுமையே இருப்பதில்லை. அதை எப்படியோ அவன் கண்டுபிடித்து வைத்திருந்தான். நான் ஏதாவது கோபித்துக்கொள்ளத் தொடங்கினால் சரி; உடனே அவன், "மாமா! இந்தக் கணக்குக்கு 'ஆன்சர்' சொல்றையா நீ!" என்று ஆரம்பித்துவிடுவான்.

அப்புறம் ஏன் நான் பேசுகிறேன்? "சரி சரி; போ போ!" என்பேன், வேறு வேலை இருப்பவன் மாதிரி. அல்லது ஏதாவது அபத்தமான ஒரு பதிலைச் சொல்லிவிட்டுப் போய்விடுவேன். ஒரே வேட்டுச் சிரிப்புத்தான்! "தப்பு! ஐயையே—தப்பு!" என்று விழுந்து விழுந்து சிரிப்பான்.

இன்றும் அப்படித்தான். நான் கோபமாக இருந்தேனா? எடுத்ததுமே என்மேலே கணக்குப் பாணத்தைத் தொடுத்துவிட்டான். எனக்கு ஓடுவதற்கு வழியில்லை.

"மாமா! இந்தக் கணக்குக்கு விடை தெரியுமா உனக்கு? சரியாச் சொல்லாட்டா ஒரு கணக்குக்கு இரண்டணா கொடுத்துடணும்!" என்றான்.

நான் அவசரமாக தினசரிப் பேப்பரை எடுத்துக்கொண்டு, 'இன்றைய நிகழ்ச்சி'களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். 'பெற்றோர் கடமை' என்ற பிரசங்கத்துக்கு அன்று நான் தலைமை வகிக்கப் போகிறேன்.

"மாமா, கணக்கைச் சொல்லட்டுமா?" என்று தொடங்கினான்

நந்து. என் பதிலுக்கு எதிர்பார்க்க வில்லை. "ஒரு பெண் ஏரிக்குப் போனாள். அவளிடம் 5 படி பிடிக் கும் குடமும் 3 படி பிடிக்கும் தோண்டியும் இருந்தன. ஆனால் அவள் சரியாக 4 படி தண்ணீர் அளந்து கொண்டுவந்தாள். எப் படி அவளால் கொண்டு வர முடிந் தது?" என்று கேட்டான்.

பெண்களே எப்போதும் இப் படித்தான். அவள் ஐந்து படிக் குடம் எடுத்துக்கொண்டு போனால் என்ன, போகாமல் இருந்தால் என்ன? எனக்கு அவர்கள் விஷ யத்தில் என்றும் சிரத்தையே கிடையாது. இப்படி ஒரு கணக்குப் போட்டுக்கொண்டு மூளையைக் குழப்பிக்கொள்வதைவிட வேறு முட்டாள்தனம் ஏதாவது உண்டா? நமக்கு வேறு தொல்லை கிடையாதென்று இது ஒரு தொல்லையா? ஆனால் பையன், "மாமாவுக்குக் கணக்கு சுழிப்பு போய்!" என்று கேலி செய்யாமல் இருக்க வேண்டுமே! மதிப்பைக் கொஞ்சமாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? அதற்காக, "எங்கே எங்கே, உன் கணக்கை மறுபடியும் சொல்லு. நான் கவனிக்கவில்லையே!" என்று கேட்டேன் நந்துவை. ஆனால் மனசுக்குள் 5 படியும் 3 படியும் என்று கணக்கைக் குழப்பிக் கொள்ளத் தொடங்கினேன்.

இந்த மாதிரி மூளையைக் குழப் பும் கணக்குகள் நான் எவ்வளவோ போட்டிருக்கிறேன். இந்தப் படியிலிருந்து அந்தப் படியில் ஜலத்தைக் கொட்டி அந்தப் படியிலிருந்து இந்தப் படிக்குக் கொட்டி ஏதோ மாற்றி மாற்றிக் கொட்டிக் கடைசியில் அது சரி யாக வர வேண்டும். இப்படிக் கொட்டி அளந்த தண்ணீரால் மேட்டூர் அணையே நிரம்பி, தஞ்சா வூர் - திருச்சி ஜில்லாவே பாசனம் செய்திருக்கலாம்.

"என்டாப்பா, அந்தப் பெண் இப்படி யெல்லாம் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக் கப் போக வேண்டும்? ஆண் பிள்ளையானால் 4 படித் தண்ணீர் வேண்டுமானால் 4 படிக் குடத் துடனே போவானே இல்லையோ? பெண் பிள்ளை விவகாரம் எல்லாமே இதுதான். கொண்டுவரும் தண்ணீர் அதிகமானால்தான் என்ன, மோசம்? பூச்செடிகளுக் குக் கொட்டப்படாதா?" என்று அலுத்துக்கொண்டு சொன்னேன்.

"சரிதான்! சர்க்கார் ஓர் அணையேகூடக் கட்டி விடுவார் கள், நீ இந்தத் தண்ணீர்க் கணக்கை முடிப்பதற்குள்" என்றான் நந்து.

நான் மிரள மிரள அவனைப் பார்த்தேன். அவன் பரிதாபத் தோடு, "சரி; எடு இரண்டணாவை! நான் சொல்லுகிறேன்" என்று கணக்கின் விடையைச் சொல்ல ஆரம்பித்தான்.[1] என்ன விடையோ, அந்தக் குழப்பத்தை நினைத்தாலே எனக்கு இப்போது மண்டையைச் சுற்றுகிறது. நான் மரியாதையாகக் காசைக் கொடுத்தேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

நந்து என்னை அத்துடன் விட்டால்தானே? அந்தப் பெண்ணை அந்தக் குடத்துடன் விட்டு விட்டு, வேறு ஒரு மனித னுடைய சங்கடத்தை அவன் விவரிக்கத் தொடங்கினான். ஒரே இருட்டான அறையாம். அதிலே

ஒரு பீரோவாம். அந்தப் பீரோவிலே 10 சிவப்புக் காலுறையும் 16 நீலக் காலுறையும் இருந்தனவாம். ஒரு ஜோடிக் காலுறையை எடுக்க வேண்டுமாம். அவன் எவ்வளவு எடுத்தால் ஒரே நிறமுள்ள காலுறைகள் இரண்டு சேர்க்க முடியும் என்பது அவன் சங்கடம்.

'இதற்குப் போய்ச் சங்கடப் படுவானேன், ரொம்பச் சுலபமாச்சே!' என்று ஒரு கணம் எனக்குத் தோன்றியது. 'பத்துச் சிவப்பு உறைகள் இருக்கின்றனவே. அவன் பதினொன்று எடுத்துவிட வேண்டியதுதானே? அப்பொழுது நிச்சயம் தவறாதே! சரி; பயல் மாட்டிக்கொண்டு விட்டான்!' என்று எண்ணி, "எண்டா, இதுகூடவா உனக்குத் தெரியவில்லை? பதினொன்று எடுத்தால் சரியாகப் போகிறது!" என்றேன்.

"தப்பு, தப்பு!" என்று கத்து கூச்சல் போட்டான்.

"எப்படிடா தப்பு? முட்டாளே, சரியாகப் பாரடா!"

"இல்லே; தப்புன்னா தப்புத்தான். எடு, இன்னொரு இரண்டணா!" என்றான் அவன்.

"எப்படித் தப்பு? நீதான் சொல்லேன் பார்ப்போம், சரியான விடையை!" என்றேன்.

"ஓஹோ - ஹோ..ஹோ!" என்று அந்தப் பயல் வ்ழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே ஒரு விடையைச் சொன்னான்.

"இதுக்கு என்னடா இப்படிப் பிரமாதச் சிரிப்பு! உனக்கு வேணும்னா கேளேன், தரேன் இரண்டணா!" என்று சொல்லி விட்டு இரண்டணாவை விட்டெறிந்தேன். பதினொரு காலுறைகள் என்ற விடை தப்பாம்! எப்படி

இருக்கிறது விஷயம்! அது சரியான விடையில்லையா!

நான் காபி சாப்பிடக் கீழே போன வரையில் அவன் என்னையே சுற்றிக்கொண்டு வந்தான்.

"இன்னும் என்னடா?" என்றேன்.

"இந்தக் கணக்கை மட்டும் சொல்லிவிடு, பார்க்கலாம்!" என்றான்.

"எதடா பெரிய தொல்லையாப் போச்சு! எங்கே, சட்டுனு சொல்லிவிட்டுப் போயேன்" என்றேன்.

"ராமசாமிக்கு 125 ரூபாய் வேண்டியிருந்தது. அவன் ஒரு மார்வாடிக் கடையில் ஒரு வெள்ளித் தட்டை அடகு வைத்து 75 ரூபாய் வாங்கினான். அப்புறம் அந்த அடகுச் சீட்டை இன்னொருவனிடம் வைத்து 50 ரூபாய் வாங்கினான். இந்த விவகாரத்திலே யாருக்கு நஷ்டம்?" என்று கேட்டான் நந்து.

"ம்.. இது சரியான கேள்வி! என் என்றால் பணவிஷயம் பார்!" என்று சொன்னேன். பண விஷயம் என்றால் அது நமக்குப் புரியாதா? அதனால்தான். மூன்று ஆசாமிகளும், மொத்தமாய் 250 ரூபாய்களும் அடங்கிய விவகாரம் இது. இவ்வளவுதானே! அடகு வைத்த ராமசாமிக்கு 25 ரூபாய் நஷ்டம். ஆனால் அவன் இன்னொருவனிடமிருந்து 50 ரூபாய் வாங்கிவிட்டானே. அப்போ, மொத்தம் கூட்டினால் 175 ரூபாயாகிவிட்டது! ஆனால் அந்த இன்னொருத்தன் அடகுச் சீட்டை 50 ரூபாய் கொடுத்து வாங்கினானே, அவனுக்கு எவ்வளவு ஆச்சு? ஒரு நூறு, ஒரு ஐம்பது ஆக ரூபாய் 150 ஆச்சு. அப்போ ராமசாமிக்கும் அந்த இன்னொருத்தனுக்குமா ஆனதைச் சேர்த்துக் கூட்டினால் 325 ரூபாய் வந்திடறது. ஆகையினாலே அந்த 325 ரூபாயும் அந்த மார்வாடிக்குத்தான் நஷ்டம். இல்லையா?"

விடையை அழுத்தலுடன் கண்ணைச் சுருக்கிக்கொண்டு சொல்லிவிட்டுப் போக ஆரம்பித்தேன்.

பார்க்க வேண்டுமே சிரிப்பை! தீபாவளிக்கு வேறே பட்டாஸ் வெடிகளை வாங்கியிருக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட சிரிப்பு எழுந்தது.

"325 ரூபாயா நஷ்டம்? ஹோ ஹோ, ஹோ! எடு, இன்னொரு இரண்டணாவை!" என்றான் நந்து.

என்னுடைய கணக்கு எங்கே யாவது பிசகியிருக்குமோ, ஒரு வேளை! எங்கே வழி பிசகியிருக்கும்? எது சரியான விடையாய் இருந்தால் என்ன? அதற்கு எதுக்காக இப்படி மண்டையை உடைச்சுக்கணும்? ஆனா இந்த மாதிரிக் கணக்குகளுக்கு ஒரு முடிவு கட்டணுமோ, இல்லையோ! நான் எப்படி முடிவு கட்டினேன், தெரியுமா?

"டேய், இங்கே வாடா, இங்கே! என்னடா எதை எடுத்தாலும் தப்பு என்கிறே! உம்..?" என்று அவன் காதைப் பிடித்துக்கொண்டேன்.

ஆனால் நந்துவா விடுகிறவன்!

"பந்தயப்படி இரண்டணாவைக் கொடுத்துவிட்டு, காதைத் திருகிக்கோ, மாமா!" என்றான்.

"நீ சொல்லியா விடை?"

"ஓ.." என்று அவன் ஒரு விடையைச் சொன்னான்.[3]

"காசு கிடையாது போ! எனக்கு இப்ப நேரமில்லே, உன் கணக்கைச் சரி பார்க்க!" என்றேன்.

"மாமா! மாமா! ராக்கெட் பாம் விலே ஆறணுதான், மாமா! காலணு கொடுத்தட்டே. அந்த இரண்டணுவையும் கொடுத்தடு, மாமா!'' என்ருன்.

எங்கே வேறு ஒரு கணக்கை ஆரம்பித்து விடுவானே என்று அவனிடம் இரண்டணுவைக் கொடுத்த விரட்டினேன்.

"படார்!'' என்று சற்றைக்கெல்லாம் வெடித்தது அந்த ராக்கட் பாம்!

நந்து சொன்ன விடைகள்:

(1) முதலில் 3 படித் தோண்டியில் ஜலத்தை மொண்டு 5 படிக் குடத்தில் விடு. மறுபடியும் தோண்டியில் ஜலத்தை மொண்டு 5 படிக் குடத்தில் விடு. ஆனுல் ஒரு படி மீறும் அல்லவா? அப்படியே இருக்கட்டும். இப்பொழுது 5 படி ஜலத்தைக் கீழே கொட்டிவிடு. மீந்த அந்த ஒரு படி ஜலத்தை அந்த 5 படிக் குடத்தில் விடு. ஒரு படி ஆச்சா? மூன்று படி தோண்டி காலியாக இருக்கிறதா? இப்பொழுது அதை மறுபடி மொண்டு 5 படிக்குடத்தில் விட்டால் மூன்றும் ஒன்றும் நாலு படி ஆச்சா, மொத்தம்? அவ்வளவுதானே!

(2) மொத்தம் 3 உறைகள் எடுத்தாலே போதுமே. 3 எடுத்தால் எப்படியும் ஏதாவது இரண்டு ஒரே நிறத்தில் இருந்துதானே தீரும்? இதிலே என்ன சங்கடம்?

(3) இன்னெருத்தன் 50 ரூபாய் கொடுத்து ராமசாமியிடமிருந்து அடகுச் சீட்டை வாங்கிக் கொண்டானே, அவனுக்குத்தான் கஷ்டம். எப்படித் தெரியுமா? வெள்ளித் தட்டைத் திரும்பப்பெற வேண்டுமானுல்அவன் இன்னும் 75 ரூபாய் அல்லவா கட்டவேண்டும்?

பொறுப்பு

ஒரு வானம்பாடி தன் குஞ்சுகளுடன் ஒரு வயல் ஓரமுள்ள மரத்தில் வசித்து வந்தது அந்த வயலிலுள்ள நெற்கதிர்கள் எல்லாம் நன்ருக முற்றியிருந்தன. இன்னும் அறுவடை ஆகவில்லே. அந்தச் சமயத்தில் வயலின் சொந்தக்காரன் வந்து, "சரி, கதிர்கள் பழுத்துவிட்டன. நாளே ஆட்களே அனுப்பி அறுக்கச் சொல்லவேண்டியதுதான்'' என்று திரும்பினுன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த வானம்பாடிக் குஞ்சுகள் வானம்பாடியிடம், "அம்மா. அறுவடை செய்யப் போவதால் நாம் இங்கே இனிமேல் வசிக்க முடியாது'' என்றன அதற்குத் தாய் வானம்பாடி, "இப்பொழுது அந்த மனிதன் வந்து அறுவடை செய்ய மாட்டான். அவன் தன் வேலேயைத் தானே செய்யவேண்டும் என்ற பொறுப்பு இல்லாமல் பிற ஆட்களே நம்பி இருக்கிருன்'' என்று சொல்லிற்று.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அந்த மனிதன் மறுபடியும் வந்தான். "அடடா! நெல் மணிகள் எல்லாம் கீழே உதிர்ந்து போகின்றனவே! சரி, நாளேக்குக் கிடைத்த கூலியாட்களுடன் நானே அறுக்கப் போகிறேன்'' என்று திரும்பினுன்.

இதைக் கேட்ட தாய் வானம்பாடி, "குழந்தைகளே! இந்தத் தடவை நாம் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான். அந்த மனிதன் பிற ஆட்களேமட்டும் நம்பாமல் தானே வரப்போகிருன். பொறுப்பை உணர்ந்துவிட்டான்'' என்று சொல்லிவிட்டு வேறு இடத்துக்குக் குஞ்சுகளுடன் குடியேறியது.

—ஈசாப் கதை.

பன்மொழிப் புலவர்

எஸ். வி. ஆர்.

பல்லவ வர்மன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். அவன் மனசு பெரிதும் சஞ்சல மடைந்திருந்தது. அந்தச் சபையில் கூடியிருந்த மந்திரிகள், புலவர்கள் எல்லார் முகத்திலுமே கவலையின் சாயை படிந்து சோபையற்றிருந்தது. பல்லவ வர்மன் தன் எதிரில் தனியாக உட்கார்ந்து இருக்கும் ஒரு புலவரையும் அவையிலுள்ள மற்றப் புலவர்களையும் மாறி மாறிப் பார்த்தான். அந்தப் பார்வையில் ஒரு துடிதுடிப்புக் காணப்பட்டது.

பல்லவ வர்மன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். மகாபக்திமான்; நல்ல ரசிகன். மன்னன், புலவர்களை நன்கு ஆதரிப்பவன் என்பதை அந்தச் சபையிலுள்ள புலவர்கள் கூட்டமே எடுத்துக் காட்டியது. வாரத்துக்கு ஒரு முறை தன் அவைப் புலவர்களை அழைத்துச் சபை கூட்டுவான். அவர்கள் புதிதாகச் செய்துள்ள நூல்களை அரங்கேற்றுவார்கள். பொதுமக்களுடன் அரசனும் கேட்டு மகிழ்வான்.

வழக்கம் போல் இரண்டு நாட்களுக்கு முன் சபை கூடியது. ஒரு புதுப் புலவர் ராஜ சபைக்கு வந்தார். பல்லவ வர்மன் அவரை வரவேற்று ஆசனம் அளித்தான். அவர் சிரமபரிகாரம் செய்து கொண்ட பின்னர் அவரைப் பற்றி மெதுவாக விசாரித்தான் மன்னன். அந்தப் புலவர், "மன்னர் திலகமே! உன் பெருந்தன்மையையும் வள்ளன்மையையும் பற்றிப் போற்றிப் புகழாதார் இல்லை. நான் இமயம் முதல் குமரி வரையில் சுற்றியிருப்பதால் எனக்கு எட்டுப் பாஷைகள் கரதலையாகத் தெரியும். தங்கள் சபையில் பல நாட்டுப் புலவர்களும் அங்கம் வகிப்பதைக் காண்கிறேன். உன் சபையில் உள்ள புலவர்களைக் கொண்டு என்னைப் பரீட்சை செய்து என் தாய் மொழியைக் கண்டு பிடிக்கச் செய்! பல நாட்டுப் புலவர்களையும் மேதைகளையும் இந்தப் பரீட்சையில் நான் வென்றிருக்கிறேன்'' என்று கூறினர். பல்லவனுக்கு எப்போதுமே இத்தகைய பரீட்சைகள் என்றால் உயிர். கடைசியில் பரீட்சையில் ஜயித்தவருக்கு ஆயிரம் கழஞ்சுகள் பரிசு தருவதாகவும் அந்தச் சபையிலேயே அறிவித்தான்.

பல்லவ வர்மனின் அவைப் புலவர்கள் எல்லாரும் பரிசிலைப் பெற வேண்டும் என்ற ஆவலில் என்னென்னவோ மனக்கோட்டைகள் எல்லாம் கட்ட ஆரம்பித்தனர். இன்ன இன்ன விதமாகக் கேட்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்கள். பல்லவச் சக்கரவர்த்தியின் பரிசிலைப் பெறுவது என்றால் சாமானியமா?

அன்று மாலையே மறுபடியும் சபை கூடியது. பல்லவ வர்மனின் அவைப் புலவர்கள், ஒவ்வொருவராகத் தங்கள் தீர்மானப்படி வித விதமான கேள்விகள் எல்லாம் கேட்டார்கள். புதுப் புலவர் டக், டக்கென்று பதிலளித்து

வந்தார். வடமொழி, துளு, கன்னடம், பாலி, தெலுங்கு, தமிழ் முதலிய பல பாஷைகளிலும் கேட்ட கேள்விகளுக்கு அந்தந்த மொழி பேசுபவரைப் போலவே புலவர் பளிச் பளிச்சென்று பதிலளித்து வந்தார். கொஞ்சங்கூடத் தட்டுத் தடங்கவில்லை. அந்தந்த மொழிக்குரிய தொனி துளியாவது தவறவில்லை.

இன்றுதான் மூன்றாம் நாள்; கடைசி நாள். பல்லவவர்மன் அவை கூடியிருந்தது. பலர் எப்படி எப்படியோ கேள்விகள் எல்லாம் கேட்டுப் பார்த்தார்கள். அவருடைய தாய்மொழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தன் அவைப் புலவர்களால் ஒரு புலவரின் தாய் மொழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் மன்னனுக்குத் தலையிறக்கமாயிருக்காதா? தன் நாட்டுப் புலவர்கள் தோல்வியுறுவதா? அதனால்தான் பல்லவவர்மன் அமைதியின்றி வீற்றிருந்தான்.

மூன்று நாட்களாய் வாய்திறவாமல் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சன் மன்னனின் கலவரத்தைப் புரிந்து கொண்டான். மன்னனின் அருகில் போய் ஏதோ காதோடு சொன்னான். அதைக் கேட்டதும் மன்னனின் முகம் கொஞ்சம் மலர்ச்சியுற்றது.

இரண்டு நாட்கள் தங்கிப் பரிசிலைப் பெற்றுப் போகலாம் என்று புதுப் புலவரை மன்னன் வேண்டிக்கொண்டான். தனி இருக்கை, விருந்து எல்லாவற்றிர்கும் பிரமாதமாக ஏற்பாடு செய்தான்.

அவை கலைய ஆரம்பித்தது. அவைப் புலவர்கள் எல்லாரும் தொங்கிய தலையுடனும் வாடிய முகத்துடனும் வெளியேறினார்கள். கடைசியாகப் புதுப் புலவரும்

மன்னனும் மந்திரியும் பேசிக்கொண்டே சென்றார்கள். புதுப் புலவர் முதலில் போய்க்கொண்டிருந்தார். வாயிற் படியைப் புலவர் தாண்டினதுதான் தாமதம்; மந்திரி பின்புறமாகப் புலவரின் விலாவில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். இதைச் சற்றும் எதிர்பாராத புலவர் திடுக்கிட்டு, "அப்பா! ஆருது அதன் குத்துதாரே?" என்று இரைந்து கத்திக்கொண்டே திரும்பினார். அவர் வலது கை சடக்கென்று இடுப்பருகில் வாளை உருவுவதுபோல் சென்று திரும்பியது.

மந்திரி உடனே புலவரை நோக்கித் திரும்பி, "புலவர் பெருமானே, கன்னட நாட்டிலிருந்து வந்துள்ள தங்களைச் சிறைப் பிடிக்க வேண்டியிருக்கிறது!" என்று கூறிவிட்டு உடனே வாயிற் காப்பாளர்களை நோக்கி, "ஹூம், இவரை உடனே சிறை செய்யுங்கள்" என்று கடுமையான குரலில் கட்டளையிட்டான்.

பல்லவவர்மனுக்கு ஒன்றுமே புரியவில்லை, விழித்தான்.

"அரசே, இவர் புலவர் மட்டும் அல்ல; படைத்தலைவரும்கூட. நான் இந்தப் புலவரை அவர் சற்றும் எதிர்பாராத போது ஓங்கிக் குத்தியதும் கன்னட பாஷையில், 'யாருடாது குத்தினது?' என்று கேட்டார். அத்துடன் கூட அவர் வலது கை இடுப்பருகில் சென்றதைக் கவனித்தீர்களா? ஆபத்துக் காலத்தில் இடுப்பில் செருகி இருக்கும் கத்தியை எடுத்த பழக்கத்தில்தான் இப்பொழுதும் அவர் வலதுகை உடனே இடுப்பருகில் சென்றது. உண்மைப் புலவராயிருந்தால் அவர் கத்தியைக் கையால் தொடுவாரா? ஆகையால் இவர் கன்னட தேசத்துப் படைத்தலைவர் என்று அறிந்து கொண்டேன். அந்தநாட்டுப் படைத்தலைவர் ஒரு பன்மொழிப் புலவர் என்று கேள்வி. அவர் வேவு பார்க்கவே வந்திருக்கிறார். ஆகவே இவருக்குத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும்" என்று மந்திரி விளக்கினான்.

மறு நாள் சபை கூடியது. அந்தப் புதுப் புலவரைச் சபையில் காவலாளர்கள் அழைத்து வந்தனர்.

"மன்னவா, நான் கன்னட தேசத்துப் படைத்தலைவர்தான். உளவு அறிந்து செல்வதற்காகவே இந்த வேஷத்தில் வந்தேன். உங்கள் முதல் மந்திரி நாட்டில் இருக்கும் வரையில் உங்கள் நாட்டை வேற்றரசர்கள் ஜயிக்கவே முடியாது" என்று உண்மையை ஒப்புக்கொண்டார் புலவர்.

சபையே திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தது. மன்னன் என்ன தண்டனை கொடுக்கப் போகிறானே என்று ஆவலாக உட்கார்ந்திருந்தனர்.

பல்லவவர்மன் ஒரு முறை சபையைச் சுற்றி நோக்கி, "நீர் உண்மையை ஒப்புக் கொண்டது பற்றி எமக்குச் சந்தோஷம். நீர் கன்னட தேசத்து வீரனேயாயினும் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றப் புலவராகவும் விளங்குகிறீர். உங்கள் அறிவுத் திறமைக்காக மன்னித்து விடுகிறேன். இந்தாருங்கள், ஆயிரம் கழஞ்சுகள்" என்று கூறி, புன்னகையுடன் ஒரு சிறு பையை எடுத்துக் கொடுத்தான் மன்னன்.

புலவரின் கண்களில் நீர் தளும்பிற்று.

ஒரு நாள் அரசன்

ஸி. எஸ். விஜயா

கந்தன் ஒரு விறகு வெட்டி. அவன் தினம் காலையில் எழுந்து காட்டுக்குப் போய் விறகு வெட்டி வந்து விற்றுச் சம்பாதிப்பான்.

ஒரு நாள் அவன் காட்டில் விறகு வெட்டும்போது, பக்கத்து நாட்டு அரசன் அந்தக் காட்டுக்குத் தன் பரிவாரத்துடன் வேட்டையாட வந்திருந்தான். பரிவாரத்தினர் கூடாரம் போட்டு அரசனுக்கு வேண்டிய சௌகரியமெல்லாம் செய்வதைக் கந்தன் தூரத்திலிருந்தே பார்த்துக்கொண்டிருந்தான். அரசனைக் கண்ட கந்தனுக்கு என்னவோ ஒரு பொறாமை வந்துவிட்டது.

“சீ..நானும் ஒரு மனிதன். அந்த அரசனும் ஒரு மனிதனே. இருந்தும், நான் தினம் முதுகு உடைய விறகு வெட்டி விற்று வயிற்றுப் பிழைப்பைப் பார்க்கிறேன். இவன் உட்கார்ந்த இடம் விட்டு அசையாமல் எல்லாம் அதிகாரத்துடன் நடத்திக்கொள்கிறான். இருந்தால் அவன் போலல்லவா இருக்கவேண்டும்” என்று எண்ணினான்.

கந்தன யோசனை செய்து பார்த்தான். ‘என்ன செய்தால் நாம் இந்த மாதிரி அரச போகத்தை அநுபவிக்கலாம்?’ என்று மூளையைக் குழப்பிக்கொண்டு யோசித்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்று இரவு அரசன் காட்டுக்குள் சில ஆட்களுடன் வேட்டையாடச் சென்றுவிட்டான். கந்தன் மெல்லத் தன் இடத்தை விட்டு நகர்ந்தான். காவல் ஆட்களும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். மெல்லக் கூடாரத்துக்கு அடியில் ஒரு சிறு துவாரம் செய்து, அதன் வழியாக உள்ளே புகுந்தான். உள்ளே அரசனின்

பலவகை ஆடைகள் அவன் கண்களைப் பறித்தன. அவைகளில் தனக்குப் பிடித்ததை எடுத்துக் கொண்டான். வந்த வழியே ஓசைப்படாமல் திரும்பிவிட்டான். அன்று நல்ல நிலா. கந்தன் அந்தப் புத்தாடைகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு பக்கத்தில் இருந்த குளத்தில் நன்ருகக் கை, கால், முகம் கழுவிக்கொண்டான். பிறகு கண்ணுடிபோல் இருந்த அந்தக் குளத்தில் நிலா வெளிச்சத்தில் தன் முகத்தை அழகு பார்த்துக் கொண்டான். திருப்தியுடன் பக்கத்தில் இருந்த மரத்தில் போய்ப் பதுங்கிக் கொண்டான்.

மறு நாள் விடிந்ததும் அரசன் கூடாரத்திற்குத் திரும்பினுன். பிறகு சற்றுக் களைப்பாறினுன். அந்தச் சமயம் கந்தன் கம்பீரமாய் அரசன் முன் வந்து நின்ருன். அரசன், "யார் நீ?" என்ருன்.

கந்தன், தான் என்ன சொல்ல வேண்டும் என்பதை முன்பே மனப்பாடம் செய்து வைத்திருந்தான். அதனுல் உடனே, "ராஜாதி ராஜனே! நான் வட நாட்டு அரசனின் மைந்தன். இந்தப் பக்கமெல்லாம் சுற்றிப் பார்த்து வரலாம் என்று கிளம்பியுள்ளேன்" என்ருன்.

அரசன் மேலும் வியப்புடன், "என்ன! நீ வடநாட்டு அரசனின் மைந்தனு? பின் என் நீ தனியாய் வந்தாய்?" என்ருன்.

'இவன் நம்மை நம்பவில்லையா என்ன? எதடா சங்கடம்?' என்று எண்ணினுன் கந்தன். பிறகு சமயோசிதமாக, "இல்லை... நான் தனியேதான் புறப்பட்டு வந்தேன். சதா ஆட்கள் படை சூழ்ந்துகொண்டு, அவர்கள் பணிவிடையை ஏற்றுச் சும்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. அதனுல் தான் தனியாகவே புறப்பட்டு வந்தேன்" என்று ஏதோ சொல்லி வைத்தான்.

அரசன் மேலே ஒன்றும் கேட்கவில்லை. அவனை அரண்மனைக்குச் சகல உபசாரங்களுடன் அழைத்துச் சென்ருன்.

அரண்மனையில் ஒரு விஸ்தாரமான அறை கந்தனுக்கு அளிக்கப்பட்டது. அதில் வேண்டிய செளகரியங்களுடன் கூப்பிட்ட குரலுக்கு ஆட்களும் காத்திருந்தார்கள். கந்தனுக்கு ஒரே சந்தோஷம்.

'இதல்லவா வாழ்வு!' என்று எண்ணிப் பெருமைப் பட்டுக்கொண்டான்.

அந்தச் சமயம் ஒரு பணியாள் உள்ளே வந்து, "மகாப் பிரபு... ஸ்நானத்துக்கு எழுந்தருளுங்கள்" என்ருன். கந்தன் தன் ஆடைகளைக் களைய எழுந்தபோது நாலு ஆட்கள் ஓடிவந்து அவனைக் குளிக்க அழைத்துச் சென்ருர்கள்.

அங்கே ஒரு கிண்ணத்தில் வைத்திருந்த வாசனை மிக்க தைலத்தை ஒருவன் எடுத்து வந்து கந்தன் தலையில் வைத்துத் தேய்த்தான். எண்ணெய் தேய்த்து எந்தக் காலமாகியிருந்ததோ, கந்தன் தலை எவ்வளவு எண்ணெய் வைத்தாலும் அவ்வளவையும் இழுத்துக்கொண்டது. இதைக் கண்ட ஆட்களுக்கு ஆச்சரியமாகிவிட்டது. 'இதென்ன, பத்துக் கிண்ணி எண்ணெய் தேய்த்ததாகிவிட்டது! இன்னும் தேய்த்தால்கூட தாங்கும்போல இருக்கிறதே!' என்று எண்ணினுர்கள்.



கந்தன், "இப்போது ஊர் ஊராகச் சுற்றியதால் என் தலை உஷ்ணம் கொண்டு விட்டது!" என்று அவர்களுக்குச் சமாதானம் சொன்னான். ஸ்நானமெல்லாம் ஆன பிறகு ஆட்கள் வேறு புது ஆடைகள் அணிவித்து அவனை உள்ளே அழைத்து வந்தார்கள். அங்கே தாதிகள் பலவகைப் பக்ஷணங்களை வைத்துக் கொண்டு அவன் வருகைக்காகக் காத்திருந்தார்கள். கந்தன் முந்திய நாள் பட்டினியானதால், எண்ணெய் தேய்த்துக்கொண்ட களைப்பும் அதுவும் சேர்ந்து கொண்டு அவனுக்குப் பசி காதைப் பிய்த்துக்கொண்டு போயிற்று. அதனால், அவர்கள் கொண்டுவந்த எல்லாப் பக்ஷணங்களையும் தின்று தீர்த்துவிட்டான்.

தாதிகள் வியப்பால் வாயடைத்து நின்றனர். ஒருத்தி, "இதேதடி இது? இதுவரை எந்த அரசனும், அரசகுமாரனும் இப்படிக் காணாதது கண்டதுபோல் தின்று இதுவரை பார்த்ததே இல்லை!" என்று மோவாய்க் கட்டையில் கை வைத்துக் கொண்டு நின்றாள். இதற்குள் எண்ணெய் தேய்த்து விட்டவனும் அங்கே வந்து, "ஆமாம், அம்மா, பத்துக் கிண்ணி எண்ணெய் தேய்த்தால்கூடப் போத மாட்டேன் என்கிறது!" என்றான்.

கடைசியில் எல்லோரும், "இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இவன் கண்டிப்பாய் ராஜகுமாரனல்ல. யாரோ ஒரு சோம்பேறி. எப்படியோ சூழ்ச்சி செய்து இங்கே வந்திருக்கிறான்" என்று பேசிக் கொண்டே வெளியே வந்தார்கள்.

அவர்கள் பேசியது ஒன்றும் கந்தன் காதில் விழவில்லை. அவனுக்கு அவ்வளவு தூக்கம், பாவம். பக்ஷணங்களைத் தின்றுவிட்டு மஞ்சத்தில் சுருட்டி மடக்கிக்கொண்டு படுத்துவிட்டான்.

அன்று இரவு கந்தன் சகல உபசாரங்களையும் ஏற்றுக்கொண்டு மஞ்சத்தில் நன்றாய்த் தூங்கி விட்டான். இரவு பன்னிரண்டு மணி இருக்கும். உள்ளே ஓர் ஆள் வந்தான். "மகாப் பிரபு, உடனே எழுந்தருளுங்கள், பக்கத்து ஊர் அரசன் நம்மேல் திடீரென்று படை எடுத்துவிட்டான். அரசனும் ஊரில்லை. நீங்கள்தான் சமயத்துக்கு எங்களைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் க்ஷத்திரிய தர்மம்!" என்றான்.

பையன்: "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு!"

டாக்டர்: (வெளியில் வந்து) டேய், உள்ளே போய்ப் படிடா!

கந்தனுக்குத் தூக்கக் கலக்கத்தில் ஒன்றுமே புரியவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். எதிரே கத்தியும் கையுமாக நின்ற ஆளைக் கண்டதும் பயத்தால் நா வறண்டது. ஒன்றுமே பேச முடியவில்லை. வெகு சிரமத்துடன், "என்ன, சண்டையா?" என்றான்.

"என், உடனே போருக்குப் புறப்படுங்கள் பிரபு; ஊருக்கே ஆபத்து. அவர்கள் சைன்னியம் மிக்கப் பலமானது. நாம் நம் உயிரைக் கொடுத்தாலும் ஊரைக் காக்க வேண்டும்" என்றான்.

"என்னது! உயிரைக் கொடுத்து ஊரைக் காக்கவேண்டுமா? ஐயோ..நான் சாக முடியாது.." என்று கந்தன் பலமாகக் கத்தினான்.

ஆள், "பிரபு, இதென்ன! இப்படிப் பயப்படுகிறீர்களே? இதெல்லாம் க்ஷத்திரிய தர்மமாயிற்றே; உங்களுக்குத் தெரியாததா? மேலும் வடநாட்டு அரசன் பெருமை என்ன, வீரம் என்ன? அவர் மைந்தனான தாங்கள் இப்படிப் பயப்படுவது அழகா?" என்று வற்புறுத்தினான்.

கந்தனுக்கு இருந்த பயத்தில் வார்த்தைகள் தடுமாறின. "யாரப்பா ராஜகுமாரன்? யார் க்ஷத்திரியன்? நான் கந்தன், ஐயா .. விரகு வெட்டி! என்னை விட்டு விடுங்கள். போதும்; நான் ஆசைப்பட்டது. இந்த ராஜபோகமும் வேண்டாம்; இந்தச் சண்டை போட்டுச் சாகவும் வேண்டாம். ஐயா...என்னை விட்டு விடுங்கள். நான் போகிறேன்" என்று அழுதே விட்டான். அவன் உடல் பயத்தால் நடுங்கிது.

உடனே ஆள், "அப்படிச் சொல்லுடா திருட்டுப் பயலே.. முதலிலேயே எங்களுக்குச் சந்தேகம் வந்தது. சரி, வா அரசனிடம்!" என்று இழுத்துக்கொண்டு போனார்கள்.

அரசன் முன் நின்றான் கந்தன். அரசன், "கந்தா, அன்றே நீ யார் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. என் ஆடைகளையே அணிந்துகொண்டு என் எதிரேயே துணிந்து வந்தாயே! ராஜபோகம் அநுபவிக்க ஆசைப்படுகிறாயே. அதிலுள்ள கஷ்டங்களை மட்டும் கண்டு ஏன் அஞ்சுகிறாய்? சோப்பேறி. இன்று முதல் இங்கேயே பட்டாளத்தில் உன்னைச் சேர்த்திருக்கிறேன். அதுவே உனக்குப் போதுமான தண்டனை. அநாவசியமாய், சுயேச்சையான உன் வாழ்க்கையை நீயே வீண் ஆசையால் பாழ் பண்ணிக் கொண்டாய். இனி உனக்குச் சுதந்தர வாழ்வு இல்லை" என்றான்.

கந்தன் ஏதும் பதில் சொல்லவில்லை. அவனுக்கு அழுகைதான் வந்தது.

யார் ஏமாந்தது?

ரங்கநாயகி

1

பாத்திரங்கள்:

மணி, வாசு - சகோதரர்கள்; சந்திரா-அவர்கள் சகோதரி; அத்தை - அவர்கள் அத்தை; சரோஜா - அத்தையின் ஒரே பெண்.

இடம்: மயிலாப்பூர்.

சந்: என்டா வாசு,. இப்படிச் சும்மா ஏன் உட்கார்ந்திருக்கே?

வா: சீ மூடு வாயை. நாங்களெல்லாம் ஆம்பிளை. பெண்களைப் போல் சதா தூங்க மாட்டோம்.

சந்: ஐயே, ஆம்பிளை அழகைப் பார்க்கலையாம், ஆம்பிளை அழகை. கடைக்குப் போய் சாமான் வாங்கி வரத் துப்பில்லை.

வா: நீ ரொம்ப வாழ்ந்தாய்! உப்பு, புளி போட்டு ஒரு ரஸம் வைக்கத் தெரியலை.

மணி: எல்லாம் அந்த அத்தை கொடுக்கும் செல்லம்!

சந்: ஐயே, அத்தை கொடுக்கும் செல்லத்தை நீதான் புகழ வேண்டும். அன்று லட்டு பண்ணிக் கொண்டிருந்தாள். ராயபுரத்திலிருக்கும் தன் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அனுப்பினுள். எனக்கு ஒரு துளிக்கூடக் கொடுக்கவில்லை.

ம: ஆமாம், இந்த அத்தையே ரொம்பக் கருமி. எச்சில் கையால் காக்கா ஓட்ட மாட்டாள்.

சந்: எப்படியாவது அத்தையிடமிருந்து நல்ல பக்ஷணமாக அடித்துவிடவேண்டுமடா.

வா: இந்தத் தீபாவளிக்கு விடியற்காலமேயே அவள் வீட்டிற்குப் போய் விடலாம். அப்புறம் கொடுக்காமல் எப்படிச் சாப்பிடுகிருன் பார்க்கலாம்!

சந்: ஐயோ ராமா, நீ ஒரு பைத்தியக்காரன். அத்தை தீபாவளிச்கு வீட்டில் இருந்தால் தானே பக்ஷணம் செய்யப் போகிருள்? முதல் நாளே இங்கே வந்துவிட மாட்டாளா!

ம: வராதபடி செய்துவிட்டால்!

வா: அடேய், எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறதடா. அத்தைக்குத் தன் பெண் சரோஜா, மாப்பிள்ளையிடம் ரொம்ப ஆசை. 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை' என்று சதா பெருமைப் படுத்திக்கொள்வாள். தீபாவளிக்கு முதல் தினமே அவர் வருவதாகச் சொன்ஞர் என்று அவளிடம் சொல்லிவைத்துவிடலாம். அத்தை மாப்பிள்ளைக்காக விதவிதமான பக்ஷணம் செய்து வைத்து ஏமாந்துவிடுவாள். அப்புறம் செய்த பக்ஷணமெல்லாம் நமக்குத்தான்.

வா: சரியான யோசனைதான். வா, இப்பவே போகலாம்.

2

அத்தையின் வீடு.

(மணி, வாசு, சந்திரா - மூவரும் வருகிருர்கள்)

ம: அத்தை, அத்தை! (கதவை இடிக்கிருன்.)

வா: ஓ அத்தை, எ அத்தை!

சந்: ஓ சொத்தை! சொத்தை!

சோமு: அடடா! கடைசிக் கணக்குக்கு விடை என்பது அல்லவா வருகிறது? நான் தவறிப் போய் எட்டு மட்டும் போட்டு விட்டேனடா! என்ன செய்வது?

ராமு: கவலைப் படாதே! நீ போட விட்டதை வாத்தியார் பெரிதாகப் போட்டுவிடுவார்!

—நாதன்.

(அத்தை கதவைத் திறக்கிறாள்.)

அத்தை: ஏண்டி, திமிர் அதிகமாகி விட்டதோ?

சந்: பின்னே என்ன, அத்தை அத்தை என்று கூப்பிட்டால் நீ கதவைத் திறக்கவே யில்லை. திட்டினால் மட்டும் காது கேட்டுக் கதவைத் திறந்து விட்டாயே.

அத்: ஐயே, மூளைத்ததே பிடித்து வாயைப் பார். எங்க சரோஜாவும் இருக்காளே. உன்னைப் போல் இருந்தப்போ இப்படியா வாயாடினாள்?

ம: ஆமாம் அத்தை. இந்தச் சந்திராவே மகா வாயாடிதான். குணத்திலே அத்தையைக் கொண்டு விட்டாள்.

அத்: ஏண்டா, போது போகவில்லைன்னா எங்கேயாவது போவது தானே? இங்கே வந்து என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்! அடுத்தாப்லே என் மாப்பிள்ளை இருக்காரே இவ்வளவு வயதாகியும் எல்லாரிடமும் எவ்வளவு மரியாதையாக இருக்கார்!

வா: அவர் அத்தையும் அவரிடம் ரொம்ப அன்பாக இருக்கிறாள். கேட்டதெல்லாம் செய்து தருகிறாள்.

அத்: ஆமாண்டாப்பா, நீதான் அவளைப் புகழணும். சதா அவளுக்குத் தன் பெண், மாப்பிள்ளை புகழ்ச்சிதான். சரோஜாவையும், நம்ம மாப்பிள்ளையையும் அவளுக்குப் பிடிக்காது.

வா: அத்தை, எனக்கு ஒரு சந்தேகம். அத்தையாக இருப்பவர்கள் எல்லோருமே ஒரே குணத்தோடுதான் இருப்பார்களோ?

அத்: இன்று உங்களுக்கு என்னடா கேடு? என்னை ஏன் இப்படிக் கரிச்சுக் கொட்டணும்? உங்கம்மா கொடுக்கும் செல்லம் தான்!

சந்: எல்லா அம்மாவும்தான் செல்லம் கொடுக்கிறார்கள். நீ சரோஜாவுக்குச் செல்லம் கொடுக்கவில்லையா?

அத்: ஏண்டி, பெண்ணாகப் பிறந்துவிட்டு இப்படி வாயாடுகிறாய்? சரோஜா உன் மாதிரி தான் வாயாடுகிறாளா?

ம: அவளுக்கு அத்தையிருந்தால் அவளும்தான் வாயாடுவாள்.

அத்: சீ மூடுங்கடா வாயை. உங்களைச் சொல்லி என்னடா பிரயோஜனம்? கலிகாலம் முற்றிப்

போச்சு. பெரியவர்கள் என்கிற மரியாதையே இல்லாமெ வாயாடும் பழக்கம் வந்துவிட்டது. துஷ்ட சுபாவம். என் மாப்பிள்ளையைப் பாருங்கள். நல்ல அந்தஸ்தில் இருந்தும் வாயே திறப்பதில்லை.

சந்: ரொம்ப ரைட், அத்தை. நீ சொல்றபடியே செய்து விடுகிறோம். நீ என்ன சொன்னாலும் தலை குனிந்து கேட்டு விடுகிறோம். அடேய் வாசு, மணி, தலையைக் குனியுங்கள். ......

அத்: ஏண்டி தறிதலை, அம்மாவுக்குக் கூடமாட ஒத்தாசை செய்தண்டு ஆத்திலே அடக்கமா இருக்கப்படாது? அந்தப் புருஷப் பசங்களுக்குச் சரியாகக் கூடவே வாயாடுகிறாயே.

ம: அதை ஏன் கேக்கறே, அத்தை! ஆணும் பெண்ணும் சமமாம். அதனாலே அவள் இஷ்டப்படி செய்ய அவளுக்குச் சுதந்தரம் உண்டாம்.

வா: ஏண்டா மணி, தலையை ஏண்டா நிமிர்த்தினாய்? தலை குனிந்து பேசினால்தான் அத்தைக்குப் பிடிக்கும்.

சந்: ஆமாண்டா!

அத்: சீ, தறிதலைகளா!

சந்: ஐயே, என்னமோ பிரமாதப் படுத்துகிருயே. அத்தை யாச்சே, கொஞ்சம் விளையாடலாம் என்ருல் திட்டுகிருயே. அடேய் வாங்கடா போகலாம். சரோஜா சொல்லியனுப்பின சமாசாரத்தைக் கூட அததை சொல்லவிடமாட்டாள் போலிருக்கிறது. (கிளம்புகிருர்கள்).

அத் (பரபரப்புடன்) என்னது, சரோஜா சமாசாரம் சொல்லி அனுப்பினளா? என்னடி, என்ன சொன்ஞள், சொல்லிவிட்டுப் போ!

சந்: நாங்கள் ஒன்றும் சொல்லலே. இந்தப் பொல்லாத மருமாளிடம் நீ பேசவே வேண்டாம்.

அத்: போடி போக்கிரி. நீ அத்தையிடம் விளையாடினதுபோல் நான் மருமாளிடம் விளையாடினேன். இது கூடப் புரிந்து கொள்ளத் தெரியலேயே.

சந்: தெரியாவிட்டால் போகட்டும். நான்தான் மண்டுவாச்சே.

அத்: என் கண்ணுச்சே நீ. இப்படி அத்தைக்கிட்டே நீயே கோபிக்கலாமா? சரோஜா என்ன சொல்லியனுப்பினுள்?

ம: அவளிடம் என் அத்தை கெஞ்சுகிருய்? நான் சொல்கிறேன் கேள். நேற்று அப்பா சரோஜா வீட்டுக்குப் போஞராம். தீபாவளிக்குக் கூப்பிடப் போஞர். ஆனுல் அவள் வரவில்லே என்று சொல்லி விட்டாளாம். தீபாவளிக்கு முன் தினம் அவள் வீட்டுக்காரரை உன் வீட்டுக்கு அனுப்பி....

அத்: (ஆச்சரியத்துடன்) என் வீட்டுக்கா, நிஜமாகவா, நான் இவ்வளவு பவிசாகப் போய்விட்டேனு? எனக்கு அவ்வளவு மதிப்பு வந்து விட்டதா?

சந்: ஐயோ ராமா, இந்த அத்தையைப் பாரேன். இவ்வளவு நாழி அவாளேப் புகழ்ந்தாள். இப்ப அவள் வீட்டுக்கார் வந்தாலே தனக்கு மதிப்பு என்கிருள்!

அத்: என்னமோ சொன்னேன், போ. பெரிய அந்தஸ்திலே கொடுத்துவிட்டேன். நான் மதிப்பில்லே. அவள் வீட்டுக்காரரை அனுப்பி என்னே......

வா: இனிமேல் அத்தையைக் கண்டு பிடிக்க முடியாது. நீயும் போவாய், இல்லேயா?

அத்: போகாமல் என்னடா செய்வது? கூட்டிப் போகத்தானே அவள் அனுப்புகிருள். இல்லாவிடில் அவளே வரமாட்டாளா?

வா: சரி, சரி, நல்ல பக்ஷணமாகச் செய்து வை.

அத்: பார்க்கலாம்.

சந்: எல்லாம் அப்படித்தான் சொல்வாய். பத்துவிதம் தயாராகி விடும். சரி, நாங்கள் போகிறோம்.

3

காலம்: தீபாவளிக்கு முன் தினம்

(சந்திரா, வாசு, மணி - மூவரும் அத்தை வீட்டிற்குப் போகிருர்கள்)

ம: அத்தை மாப்பிள்ளையை அழைக்கத் தயாராக இருப்பாள். கடைசியில் ஏமாந்து போவாள்.

வா: நன்ஞ வேணும். அன்று நம்மைக் கரிச்சுச் கொட்டிஞளே.

சந்: பாவம், நிறையப் பக்ஷணம் செய்து வைத்திருப்பாள்.

ம: யார் கண்டார்கள், செய்தாளோ இல்லேயோ?

வா: எல்லாம் செய்திருப்பாள். மனசிலே சரோஜா வீட்டாரைப் பற்றி வருத்தமானாலும் உபசாரத்திலும், மரியாதைகள் செய்வதிலும் குறைவு கிடையாது.

சந்: சுமார் நாலுவிதப் பக்ஷணமாவது இருக்கும்.

வா: மாப்பிள்ளைக்குத் தித்திப்பு ரொம்பப் பிடிக்குமாம். அதில் ஒரு மூன்று தினுசாவது இருக்கும்.

ம: நீயும் தித்திப்புப் பட்டன்தானே! உனக்கு இன்று நல்ல திண்டிதான்.

வ: நினைத்துக் கொண்டிரு. அத்தை கிள்ளித் தெறிக்க மாட்டாள்.

சந்: கிள்ளித் தெறிக்காமல் என்ன செய்வாளாம்? மாப்பிள்ளைக்காகச் செய்த பக்ஷணத்தைத் தூரக் கொட்டி விடுவாளோ? மாப்பிள்ளை வரப்போவதாக நாம் சரடுதானே விட்டோம்? அந்த மண்டைக்கர்வி மாப்பிள்ளை மாமியார் வீட்டிற்கு வந்து விடுவானே? பாவம், அத்தை ஏமாந்து உட்கார்ந்திருப்பாள்.

(அத்தை வீட்டை அடைகிறார்கள். அத்தை நல்ல புடவை உடுத்தி, கதவைப் பூட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்)

அத்: ஏண்டா, இன்னும் வரக் காணோமே?

சந்: நல்ல வேளை, அவர் வரவில்லை. மாப்பிள்ளை வருவதானால் கதவைப் பூட்டிக்கொண்டுதான் உட்கார்ந்திருப்பார்களோ?

அத்: ஐயே, மாப்பிள்ளை காரில் வந்து விடுவாரோ! அதெல்லாம் வரமாட்டார். கார் அனுப்பினால் நம்மால் நாழியாகக்கூடாது என்று நான்தான் கதவைப் பூட்டித் தயாராக இருக்கேன்.

சந்: காரா? யார் கார் அனுப்பப் போகிறார்கள்?

அத்: நீங்கதானேடி சொன்னீர்கள். சரோஜா தன் வீட்டுக் காரை அனுப்புவதாகச் சொன்னாள் என்றீர்களே?

(மணி, வாசு, சந்திரா-மூவரும் சிரிக்கின்றனர்)

சந்: ஐயே, இந்த அத்தைக்குப் புரிந்துகொள்ளச் சக்தியிருந்தால்தானே? நாங்கள் சரோஜா வீட்டுக்காரர் என்று மாப்பிள்ளையைச் சொன்னோம். அவள் வீட்டுக்

நாரை சொல்லவில்லை. சரி, சரி. அப்படின்னு பக்ஷணம் பண்ணலே போலிருக்கு. நல்ல வேளை, மாப்பிள்ளை இன்று வராமலிருந்தாரே!

அத்: அட ராமா. நன்னாயிருக்கு நீங்க சொன்ன லக்ஷணம். மாப்பிள்ளை என்று சொல்லக் கூடாதோ?

வா: (சந்திராவின் காதோடு) கடைசியில் பக்ஷணம் கிடைக்க நமக்கு ராசியில்லை.

சந்: (காதோடு) பேசாமல் இரு. நான் இன்னொரு தந்திரம் செய்கிறேன்.

(வெளியில்) அத்தை, இப்போ தெளிவாகச் சொல்கிறேன், கேள். மாப்பிள்ளைக்கு இன்று வர முடியவில்லையாம். நாளைக் காலை 8 மணிக்குள் கட்டாயம் வருவதாகச் சொன்னாராம். ஏமாந்து போகாமல் மாப்பிள்ளைக்கு நிறையப் பக்ஷணம் செய்து வை.

அத்: நிஜமாகவா? நிச்சயம் பக்ஷணம் செய்து வைக்கிறேன்!

மூவரும் சிரித்துக் கொண்டே போகின்றனர்.)

4

தீபாவளி தினம்; நடுப் பகல்.

(மணி, வாசு, சந்திரா - அத்தை வீட்டிற்குப் போகிறார்கள்.)

வா: சந்திரா தேவலேடா. இன்னொரு தந்திரம் செய்து விட்டான்!

(அத்தையின் வீட்டு வாசல்)

சந்: அட, இது என்னடா வீடு பூட்டியிருக்கே!

வா: கள்ளனுக்கு மேல் குள்ளன் இந்த அத்தை.

ம: அதோ, ரிக்ஷாவில் அத்தை வருகிறாள்!

சந்: எங்கே அத்தை போய் விட்டு வருகிறாய்?

அத்: சரோஜா வீட்டுக்குப் போயிட்டு வரேன். காலை 9 மணி வரையில் பார்த்தேன். மாப்பிள்ளையைக் காணோம். நேற்றும் வருவதாகச் சொன்னவர் வரவில்லை. இன்றும் வரவில்லை. உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதோ என்று பயந்துவிட்டேன். அதோடு செய்த பக்ஷணமெல்லாம் வீணாகப்போயிடுமே என்று எல்லாப் பக்ஷணத்தையும் தூக்கிக்கொண்டு ராயபுரம் பார்க்க ஓடினேன். நல்ல வேளை, ஒருவருக்கும் உடம்பு ஒன்றுமில்லை. அதோடு நான் பக்ஷணம் செய்துகொண்டு போனதில் சம்பந்தியம்மாள், மாப்பிள்ளை எல்லோருக்கும் ரொம்பச் சந்தோஷம். இதன் நடுவில் மாப்பிள்ளை ஏன் வரவில்லை என்று கேட்கக்கூட மறந்து விட்டேன். அங்கேதான் சாப்பிடணும் என்று தொந்தரவு செய்தார்கள்.

சந்: அது கிடக்கட்டும் அத்தை. எங்களாலேதானே உனக்கு நல்ல பெயர்! செய்த பக்ஷணத்திலே எங்களுக்குக் கிடையாதா?

அத்தை: அதை ஏன் கேக்கறே? மீதி மச்சமே இல்லை!

சந்: ஐயோ, உன் சொத்தைப் பக்ஷணம் யாருக்கு வேணும்? ஒன்றாவது நன்றாயிராது. எங்கம்மா சுத்த நெய்யிலே பத்துத் தினுசு செய்து கை நிறைய அள்ளித் தான் கொடுத்தாள். உன் பக்ஷணத்திற்கு இங்கு ஒருவரும் ஏங்கவில்லை. வாங்கடா, போகலாம்.

அத்: இருடீ; அப்போ நானும் வரேன்! (திரை)

வெற்றி

'எனெஸ்'

"இனி டி. தாமோதரன், 'வெற்றி' என்னும் பொருள் பற்றிப்பேசுவான்" என்று கூறிவிட்டுத் தலைவரான ஹெட் மாஸ்டர் தம் இடத்தில் அமர்ந்தார். தாமோதரன் மெதுவாக மேடைக்கு வந்தான். கூட்டத்திலிருந்து கரகோஷம் எழுந்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டு தாமோதரன் பேச ஆரம்பித்தான்:

"சகோதர சகோதரிகளே! மதிப்பு மிகுந்த உபாத்தியாயர்களே, பெரியோர்களே! வெற்றி என்ற கடுமையான பொருள்பற்றிப் பேசும்படி தலைவர் அவர்கள் சட்டளை இட்டிருக்கிறார்கள். வெற்றி இல்லாவிட்டால் மனிதனுக்கு வாழ்க்கையே இல்லை. ஒரு மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெறவில்லை என்றால் என்ன அர்த்தம்? அவனிடம்

பெரியவர்: ஏன் தம்பி, பள்ளிக் கூடம் போகாமல் இங்கே சுற்றிக் கொண்டிருக்கே?

பையன்: எங்க வாத்தியாருக்கு நீங்க பணம் கொடுக்கணுமாமே. 'அங்கேதான் சுற்றிக்கொண் டிருப்பார். போனால் பார்க்கலாம்' என்றார். அதான் சுற்றுகிறேன்.

— ஜீஜி

ஏதோ குறை இருக்கிறது என்று தான் அர்த்தம்...மனிதன் மனி தனாக வாழ்வது அவன் வாழ்வில் பெறும் வெற்றியையே பொறுத் திருக்கிறது....

"வெற்றி பெற ஒரு திட்டம் வேண்டும். திட்டப்படி நடக்க ஊக்கம் வேண்டும். அசையாத மனவுறுதி வேண்டும். ஆகவே வெற்றி என்னும் ராஜபாட்டையை அடைய, திட்டம் என்னும் ஒற்றை யடிப் பாதையில் ஊக்கம் என்னும் செருப்பு, மனவுறுதி என்ற குடை, ஜாக்கிரதை, ஆர்வம் என்ற தோழர் களுடன் நடந்து சென்றால் வெற்றி நிச்சயம்! வணக்கம்."

இவ்வாறு அவன் பேசி முடித்து விட்டு, படபடவென்று அப்பளம் நொறுங்குவது போன்ற கைதட்ட லுக்கு நடுவே, கீழே இறங்கித் தன் னிடத்தில் அமர்ந்தான்.

2

"அப்பா! அப்பா! நேத்திக்கு நான் ஆண்டு விழாவிலே வெற் றியைப்பற்றிப் பேசியதற்கு முதல் பரிசு எனக்குத்தான்! இதோ இந்தக் 'கப்'புதான் பரிசு" என்று கூறிக்கொண்டே கப்பைத் தகப் பனாரிடம் கொடுத்தான் தாமு.

"வெற்றி வெற்றி என்று பேசி, கப்பு வாங்கி விட்டாய். பரீட்சை யிலே என்ன பண்ணப் போறியோ, யார் கண்டார்கள்? பணம் சட்டற பரீட்சை! ஜாக்கிரதையாகப் படி! ஒரு வருஷப் படிப்பை வீணாக்கி விடாதே!" என்று கூறினார் தாமுவின் தந்தை.

"பரீட்சையைப் பற்றிப் பதற வேண்டாம். எழுபது பர்செண்ட் எடுத்துவிடுவேன்" என்று தந்தைக் குத் தைரியம் கூறினான் தாமு.

* * *

"பரீட்சை எப்படிடா எழு தினே?" என்றார் தகப்பனார் லீவு விட்டதும்.

"நன்றாக எழுதியிருக்கிறேன். சந்தேகமே வேண்டாம்" என்றான் தாமு.

"ரிஸல்ட்..." என்று ஆரம் பித்த தகப்பனாரிடம், "ஜூன் பர்ஸ்ட் வீக்" என்றான் தாமு.

* * *

"நாளைக்கு ரிஸல்ட் வருகிற தாம், அப்பா" என்றான் தாமு.

"உன் குட்டு வெளிப்படும்" என்றார் தகப்பனார்.



"என் உயிரை வேண்டுமானலும் பந்தயம் வைப்பேன்! நான் நிச்சயம் பாஸ்'' என்ருன் தாமு.

"எல்லாம் நாளைக்குத் தெரியும்.''

மறு நாள் காலை ஐந்து மணிக்கே எழுந்து, ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஓடி, பேப்பரை வாங்கிய தாமு அதில் அவன் நெம்பர் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான். வருத்தம் தாங்காமல், அடுத்த ரெயிலிலேயே டிக்கட் கூட வாங்கிக் கொள்ளாமல் ஏறிவிட்டான்.

3

"குட்மார்னிங் சார்! நேற்று என்ன விசேஷம்?'' என்று ரஜைகிரி போலீஸ் ஸ்டேஷனில் ஒரு கான்ஸ்டபிள் மற்ருெருவரிடம் கேட்டார்.

"ஒன்றும் இல்லை. ஒரு பையனைக் காணேமாம். தேடினபோது ஆற்றங்கரையில் அவனுடைய ஆடைகள் இருந்தன. ஆளைக் காணேம். தேடுகிருர்கள்!'' என்ருர் அந்தப் போலீஸ்காரர்.

"ஆற்றங்கரைக்குக் குளிக்கப் போனனே?''

"அதெல்லாம் இல்லை. அன்றைக்கு ரிஸல்ட் வெளிவந்தது. அவன் பரீட்சையிலே பாஸ் ஆகல்லே. அதனலே....''

"பையன் பேரு....?''

"டி. தாமோதரன்.''

அன்றைப் பேப்பரிலே தாமோதரன் தற்கொலையைப் பற்றியும் அதே பக்கத்தில் ரிஸல்டில் 18725 நெம்பர் விட்டுப் போனதற்கு மன்னிப்புக் கோரியும் செய்திகள் வந்திருந்தன.

18725 நெம்பர் தாமோதரத்தின் நம்பர் என்று அந்தப் போலீஸ்காரர்களுக்குத் தெரியுமா? ஆனல் சென்னைக்குப் போட் மெயிலில் ஏறிச் சென்ற தாமோதரன் அதைப் பார்த்ததும் அடுத்த ஜங்ஷனில் இறங்கி, அப்பாவுக்கு உடனே ஒரு தந்தி கொடுத்தான்.

"அப்பா; தோல்வியைக் கண்டு பொறுக்காமல் ஓடி வந்தேன். வெற்றி என்று தெரிந்ததும்தான் நீங்கள் எல்லாம் என்னைக் காணுமல் தேடுவீர்களே என்று கவலைப்படுகிறேன். காலை வண்டியிலேயே வருகிறேன்'' என்று கூடவே கடிதமும் எழுதிப் போட்டான்.

இதோ ஒரு பரிசு!

எம். எஸ். எஸ்.

உங்களுக்கு நீங்களே பரிசளித்துக் கொள்ளக்கூடிய ஒரு வழியை நான் சொல்லப் போகிறேன்.

அதுவே ஒரு பரிசு அல்லவா?

என் அருமைத் தம்பி தங்கைகள் பலருக்குச் சில விஷயங்கள் தேவையாயிருக்கின்றன. சிலருக்கு உடல் பலவீனமாயிருக்கிறது. அவர்களுக்குத் தேவையானது ஆரோக்கியம். இன்னும் சிலருக்கு அதிக அளவில் அறிவு தேவை. வேறு சிலருக்கு வேலைக்குப் போக வழி தேவை.

இந்தத் தேவைகளெல்லாம் கிடைத்து விட்டால் அவையெல்லாம் பரிசுகளாகாவா? சோனிக்கு ஆரோக்கியத்தையும் மக்குக்கு மூளையையும் சோர்வுள்ளவனுக்குச் சந்தோஷத்தையும் தவிர வேறு தகுந்த பரிசு அளிக்க முடியுமா?

என் தம்பி தங்கைகளை நான் சிறிதும் குறை கூறவில்லை. ஆனால் சந்தர்ப்ப விசேஷத்தால் அவர்களில் அநேகர் போதுமானபடி யோசித்துக் காரியங்களைச் செய்வதில்லை. பல விஷயங்களை உள்ளபடி உணர்வதில்லை.

உடல் நலம்

உடல் நலத்துக்கு எது ஏற்றது, எது கெடுதி என்று நன்கு தெரிந்தும்கூட, பல மாணவ மாணவிகள் உடலைச் சீராகப் பாதுகாப்பதில்லை. எல்லாரும் தினம் தவறாமல் உடற் பயிற்சி செய்யவேண்டும். நீச்சல் பழகுதல் சிறந்ததொரு தேகாப்பியாசம். சைக்கிள் விடுவது, வீட்டுக் கிணற்றில் நீர் இழுப்பது, தோட்ட

வேலை போன்ற ஆரோக்கியமான பழக்கங்களை வளர்த்து வருவது நல்லது. ஒழுங்கற்ற உணவுப் பழக்கம், புகை குடித்தல், அளவுக்கு அதிகமாகக் கண்விழித்தல், அல்லது தூக்கம் போன்ற தீய பழக்கங்களைக் கைக்கொள்ளலாகாது.

உடல் நலம் என்பது நமக்கு மட்டும் செய்து கொள்ளும் சௌகரியமல்ல. சமூகத்துக்குச் செய்யும் கடமையும் ஆகும். ஒரு நாட்டுக்கு அதன் வருங்காலப் பிரஜைகளே உண்மையான செல்வம். வளரும் தலைமுறை திடகாத்திரராய் இராவிடில் அது நாட்டுக்கே பாரம் ஆகும் அல்லவா?

அறிவுச் செல்வம்

உடல் நலத்துக்கு அடுத்தபடி முக்கியமானது அறிவுச் செல்வம். பல மாணவ மாணவிகள் சிறு வகுப்புக்களில் தேர்ச்சி பெறாமல் ஏக்கமடைந்து நம்பிக்கை இழக்கிறார்கள். உண்மையில் விடாமுயற்சியோடு பாடுபட்டால் பாடம்,

படிப்பதும் பரீட்சை தேறுவதும் எளிது. இந்திய மக்கள், அதிலும் தமிழ்நாட்டவர் என்றுமே அறிவில் குறைந்தவர் என்று பெயர் வாங்கியதில்லை. நம் முன்னோர் பெயரைக் காப்பது நமது கடமை.

யார் கண்டது? நமக்குள்ளேயும் உலகப் புகழ்பெற்று விளங்கப் போகும் அறிஞர்கள் பலர் இருக்கலாம். காலம் செல்லச் செல்லத்தான் அது தெரியும். அதனிடை நாம் முயன்று அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டாமா? விளையும் பயிருக்கு ஏற்ற உரம் அறிவுச் செல்வம்தான். விடா முயற்சி, எதையும் உன்னிப்பாகக் கேட்பது, ஞாபக சக்தி, மனசில் உறுதி இவை இருந்தால் நம் அறிவைப் பெருக்கிக்கொள்ள முடியும்.

பொது அறிவு

பள்ளிக்கூடத்தில் நிறைய மார்க்கு வாங்கும் பல தம்பி தங்கைகள் பொது அறிவு விஷயமாக ஒன்றும் தெரியாமல் விழிக்கிறார்கள். அவர்கள் உண்மையில் புத்திசாலிகளன்று. பாடப்புத்தகங்களை யந்திரம்போல உருப் போட்டு ஒப்பிப்பது மட்டும் அறிவாகாது. நம்மைச் சுற்றித் தினமும் நடைபெறும் விஷயங்களை நாம் தெரிந்துகொள்வது மிக அவசியம்.

தினசரிகளைப் படிப்பது ஒரு நல்ல பழக்கம். எல்லா மாணவ மாணவிகளும் அப்பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். படித்தவைகளை மற்ற மாணவர்களோடும் பெரியோரோடும் பேசி, சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்.

கைத் தொழில்வேலை

'பள்ளிக்கூடத்திலும் கலாசாலைகளிலும் படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது. எங்கேயாவது சிறிதுகாலம் கைத்தொழில் வேலை செய்தவராவிட்டால் கல்வி பூர்த்தியாகாது' என்று நமது பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு கூறுகிறார்.

கைத் தொழில் வேலை செய்வது இளப்பம் என்று சில தம்பி தங்கைகள் நினைக்கிறார்கள். அது கொஞ்சம்கூடச் சரியில்லை. காந்தி மகாத்மாவையும் ராஜாஜியையும் விடவா நாம் பெரியவர்கள்? அப்பெரியோர்கள் தம் காரியங்களையெல்லாம் தள்ளாத வயதிலும் தாமே பார்த்துக் கொள்பவர்கள். கைகால் ஊனமுள்ளவர் தவிர மற்றவர்கள் சிறு காரியங்களுக்குக் கூடப் பிறர் உதவியை எதிர்பார்ப்பது தவறு.

நூல் நூற்பது, தச்சுவேலை செய்வது, தோட்டவேலை பார்ப்பது, சமையல் செய்வது, சித்திரம் வரைவது, பொம்மை செய்வது, தையல் முதலியவைகளெல்லாம் பயனுள்ள பொழுது போக்காகும். திறமையுள்ளவர்கள் நாட்டியம், சங்கீதம், சிற்பம் முதலிய துறைகளில்

கருத்தைச் செலுத்திப் புகழும் பயனும் அடையலாம்.

சற்றே வயதான தம்பி தங்கைகள் டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் அல்லது வேறு தொழிற் துறைகளில் ஓழிந்த வேளைகளில் ஈடுபட்டு வந்தால் பிற்காலத்தில் அப்பயிற்சி பயனளிக்கும்.

* * *

மாணவ மாணவிகளாக இருக்கும் இந்தக் காலத்தில்தான் இளைஞர்களுக்குப் பல புது அநுபவங்கள் ஏற்படும். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் வசதியும் கிடைக்கும். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் என் அருமைத் தம்பி தங்கைகள் நாளுக்கு நாள் அறிஞராகவும் திறமை மிக்கவராயும் வளருவார்கள் என்று நம்புகிறேன்.

வருங்காலத்தில், உறுதியான உடலும் நல்ல மனமும் திறமையும் உழைப்பும் அறிவும் உள்ள நாட்டின் செல்வங்களாக நீங்கள் விளங்குவீர்களாக!

தலையணைக்கடியில்

பாலுவின் வீட்டில் அன்று பலமான விருந்து! பல வகைப் பட்சணங்கள் செய்திருந்தனர். பாலுவுக்கு மைசூர்ப் பாகு என்றால் ரொப்பப் பிரியம். வேண்டிய அளவு தின்றும் இன்னும் கேட்டான். பாலு விடாக்கண்டனாக இருந்தபடியால் அவன் தாயார் ஒரு துண்டை அவனிடம் கொடுத்து. "இதை நீ இப்போது தின்னக்கூடாது. அப்படியே தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டு தூங்கவேண்டும். மத்தியான்னம் மூன்று மணிக்கு எழுந்து சாப்பிடவேண்டும்" என்று சொன்னாள். சரி என்று பாலு மைசூர்ப் பாகை வாங்கிக்கொண்டு மாடி அறைக்குச் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டான். சற்று நேரம் கழித்து அவன் தாயார் மாடிக்கு வந்தபோதுதான் பாலு செய்த காரியம் தெரிந்தது. பாலு தன் வயிற்றின் மேல் தலையணையை வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தான்! "ஏண்டா, தலையணையை வயிற்றின்மேல் வைத்துக் கொண்டு தூங்குகிறாய்?" என்றாள். "நீ சொன்னபடி மைசூர்பாகைத் தலையணைக்கு அடியில், அதாவது வயிற்றுக்குள் பத்திரமாய் வைத்திருக்கிறேன், அம்மா!" என்றான் பாலு. பாலுவின் அம்மாவுக்கு வந்த கோபம் மறைந்து அவன் சாமர்த்தியத்தைக் கண்டு சிரிப்புத்தான் வந்தது.

—எல்கே.

அணில்

'ரமணன்'

1. கூரை தன்னில் குதித்தே ஓடும்
குஞ்சு அணிலைப் பார்—அது
சீராய் அமர்ந்து கனியைப் பற்றித்
தின்னும் அழகைப் பார்!

2. பட்டு வாலைத் தூக்கிக் கிளையில்
பாயும் அழகைப் பார்—கிளை
விட்டுத் தாவி விண்ணில் பாயும்
விந்தை தன்னைப் பார்!

3. உச்சிக் கிளையில் ஓடிச் சென்றே
உள்ளம் மகிழுது பார்—உடன்
'இச் இச்' சென்று சத்த மிட்டே
கீழே பாயுது பார்!

4. பச்சை இலைகள் இடையி லமர்ந்து
பாடி மகிழுது பார்—அது
இச்சைப் படியே எங்கும் திரிந்தே
இன்பம் கொள்ளுது பார்!

தங்கக் கடிகாரம்

கே. வி. எஸ். மணி

கிட்டுவின் மாமா ஒரு மிராசுதார். தர்மம் என்றால் ரூபாய்க்கு எத்தனை படி என்பவர். பிறர் சொத்துக்களையும் தம்முடைய சொத்தாகப் பாவிப்பதில் மிகவும் கெட்டிக்காரர். அதனாலே தானோ என்னவோ, கடவுளும் அவருக்குப் புத்திர பாக்கியத்தைக் கொடுக்கவில்லை. அடிக்கடி கிட்டுவின் வீட்டுக்கு வந்து விடுவார். கிட்டுவின் அப்பா இறந்து போய்விட்டதால் மருமகனுடைய சொத்துக்கு அவரே அதிகாரி போல நடந்துகொள்வார்.

கிட்டு மிகவும் நல்லவன். ஓடி விளையாடுவதில் கொள்ளை ஆசை அவனுக்கு. ஆயினும் எல்லோரிடமும் சரளமாகப் பழகுவான். தன்னிடமுள்ள நல்ல புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுவான். பெரியவர்களிடம் தெரியாதவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்வான். பள்ளியிலே படிப்புடன் கூட மாணவர்களுக்குத் தொழிற் கல்வியும் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று பேசுவான். அவன் மாமா மாமிக்கு இதெல்லாம் பிடிக்காது. அவருக்கு எதனாலோ அசூயையாகத்தான் இருக்கும்.

கிட்டுவின் மாமாவைப் பார்த்தாலே சிரிப்பு வந்துவிடும். எப்பொழுது பார்த்தாலும் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டே அசட்டுச் சிரிப்புச் சிரிப்பார். காரணமே இருக்காது. இதனால் அவரை மட்டமாகவும் எண்ண முடியாது. இந்த அசட்டுச் சிரிப்புடனேயே பெரிய காரியங்களையும் எப்படியோ சாதித்துவிடுவார். அவருக்கு ஊரில் கொஞ்ச நிலமும் வாழைத் தோட்டமும் உண்டு. இப்படியிருக்க, இவருக்கு ஏன் இந்தப் பேராசைக் குணம் என்று கூடச் சிலர் நினைப்பதுண்டு. 'அப்படித்தான் யாருக்குச் சொத்துச் சேர்த்து வைக்கவேண்டும், பிள்ளை குட்டியா தவறுகிறது?' என்றும் சொல்லுவார்கள்.

கும்பகோணத்திலேதான் கிட்டு எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தான். கிட்டுவின் தந்தை நல்ல குணமுடையவர். கிட்டுவைக் காலேஜ் படிப்புப் படிக்க வைக்கவேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார். அதற்குத் தகுந்தாற்போல் கிட்டுவும் நன்றாகவே படித்துவந்தான்.

உலகிலே வருங்காலத்தில் யார், எப்படி இருப்பார்கள் என்று சொல்ல முடியாதல்லவா? நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைக்கிறார் என்பதுபோல், கிட்டுவின் குடும்பத்திலும் கனவிலும் எதிர்பாராத துக்கத்தை உண்டாக்கிவிட்டார். கிட்டு எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டு இருக்கும்பொழுதே அவன் தந்தை திடீரென்று மாரடைப்பால் இறந்துவிட்டார். துக்கம் விசாரிக்க மாமாவும் மாமியும் வந்திருந்தனர். அந்தச் சாக்கிலேயே மாதக் கணக்கில் கிட்டுவின் வீட்டிலேயே காம்ப் போட்டுவிட்டார்கள்.

அத்துடனா? மாமாவுக்கு ஒரு பங்குப் பேராசை என்றால் மாமி ஒரு மலை விழுங்கியேதான். இதுதான் தக்க சமயம் என்று மெதுவாகக் கிட்டுவின் தந்தை உபயோகித்த சில பொருள்களைக் கேட்டு வாங்கிக்கொள்ளும்படி மாமாவைத் தூண்டுவாள். மாமாவும், "ஏண்டா, இது எதுக்குடா உனக்கு? எங்கிட்டே இருக்கட்டுமே" என்று கேட்பார். கொடுக்கவும் மறுக்க முடியாதவனாய் அரை மனசுடன் அவர் கேட்டதில் சில பொருள்கள் மட்டுமே கொடுத்தான் கிட்டு. கிட்டுவின் அப்பா எப்பொழுதும் ஒரு வெள்ளி வெற்றிலைப் பெட்டி வைத்திருந்தார். பேராசை கொண்ட மாமாவுக்கோ வெள்ளிப் பெட்டி உள்பட எல்லாவற்றையுமே எடுத்துக்கொள்ள முடியவில்லையே என்ற துக்கம் இருக்கத்தான் இருந்தது. கூடப் பிறந்த அக்காவின் துக்கத்தைவிட சுயநலத்தின் காரணமாக ஏற்பட்ட இந்தத் துக்கமே அவருக்குப் பெரிதாகப் பட்டது. சிறுவனுக்கு வாங்கித் தரவேண்டியது போக, துக்கத்தோடு இருக்கும் அவனிடம் கேட்பது அழகா என்பதை அவர் உணரவில்லை.

சில மாதங்கள் உருண்டோடின. கிட்டு இண்டர்மீடியட் படிப்பிற்காகச் சென்னை போய்ச் சேர்ந்தான். சென்னையில் தன் துக்கத்தை ஒருவாறு மறந்து இருந்தான்.

ஒரு நாள் நடுப்பகல் கிட்டு தன் அறையில் படித்துக்கொண்டிருந்தான். மாமாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் சென்னையில் அதிகச் செலவு செய்யாமல் செட்டாக இருக்கவேண்

டும் என்றும் ஊருக்குப் போய் அவரே கவனித்துக்கொள்வதாக வும் எழுதியிருந்தார். என்றைக் கும் இல்லாமல் இந்த மாமாவுக்கு எப்படியடா நம் குடும்பத்தில் இவ் வளவு அக்கறை வந்தது என்று கிட்டுவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. பிறகு தசரா லீவின்போது ஊர் சென்று தாயாரைப் பார்க்கக் கிளம்பினான்.

மாமா வந்துபோனாரா என்ற விஷயத்தைப் பற்றி அம்மாவிடம் கேட்டான். அம்மாவும், "ஆமா மடா, உன்பேரிலே எவ்வளவு அக் கறைதெரியுமோ அவருக்கு" என்று வெகுளியாகவே பதிலளித்தாள். கிட்டு வழக்கப்படி தந்தையின் அறையைத் திறந்து பார்க்கச் சாவி யைக் கேட்டு வாங்கினான். கிட்டு திறந்து பார்த்ததும் அறையிலே வைத்திருந்த பண்டங்களில் சில வற்றைக் காணவில்லை. தனக்கு வேண்டும் என்று எவைகளை முக் கியமாகக் கருதி வைத்திருந்தானோ, அவைகளை அங்கே காணவில்லை. கோபமாகத் தன் தாயிடம் சென்று, "என் அம்மா, மாமா இந்த அறைக்குள் வந்தாரா?" என்று கேட்டான்.

"ஏதோ பார்க்க வேண்டும் என்று போனான்" என்றாள் அவன் அம்மா.

"அதெல்லாம் சரி; அப்பாவின் வெள்ளி வெற்றிலைப் பெட்டி அங்கே இருந்ததே, அது எங்கே?" என்று அவன் கேட்டான்.

"அதை அவன் எடுத்துக் கொண்டு போவதாகச் சொல்ல வில்லையே" என்றாள் அம்மா.

கிட்டுவுக்குக் கோபம் தாங்க வில்லை. மறுநாள் காலையே மாமா வின் ஊருக்குச் சென்றான். போட் மெயில் வேகத்தில் வீட்டிற்குள் நுழைந்தான்.

மாமாவும் மாமியும் திடுக்கிட் டார்கள். "நீதான் வரச் சௌகரிய மில்லை என்று எழுதினாயே! இப்போ என்ன சமாசாரம்? எல்லாரும் சௌக்கியம்தானே!" என்று குசலம் விசாரித்தார் மாமா.

கிட்டுவும் அவர்களைப்பற்றி விசா ரிப்பது போல் பாவனை செய்தான். மாமாவோ பத்திரிகையைப் பார்த் துக்கொண்டு இருந்தார். கிட்டு வின் முகத்தை எதிட்டுக்கூடப் பார்க்க அவருக்குத் தைரியமில்லை. மாமாவின் வாயிலிருந்து உண்மை வராது என்பதைத் தெரிந்து கொண்டு, "அப்பாவின் அறையில் வைத்திருந்த சாமான்களைக் காண வில்லை. யாரோ எடுத்துக் கொண்டு விட்டார்கள்!" என்று கிட்டு சொன்னான். அதற்கு அவர் குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுப்பது போல், "நீ கொடுத்தது தவிர வேறெதவும் நான் எடுக்க வில்லை அப்பா" என்று சாதித்தார். அதற்கு மேல் கிட்டுவிற்கு அவ ரிடம் எவ்வித வாக்கு வாதமும் செய்வதில் இஷ்டமில்லை. மாமா வின் பழங்காலத் தங்கச் செயி னுடன் கூடிய பாக்கெட் கடிகாரத் தைக் கிளப்பிக் கொண்டு அதி காலையிலேயே சொல்லிக் கொள் ளாமல் ஊர் வந்து சேர்ந்தான்.

மாமாவும் மாமியும் கடிகாரத் தைக் காணமல் தேடிப் பார்த்தார் கள். கிட்டுவின் பேரில்தான் சந்தேகம் ஏற்பட்டது. மாமி மாமா விடம், "உங்கள் மருமானும் உங் களைப் போலத்தானே இருப் பான்? ஆகையால் மரியாதையாக அவனிடம் அவனுடைய சாமான்

களைக் கொடுத்துவிட்டு, மூன்று பவுன் தங்கச் செயின் உள்ள அந்தக் கடிகாரத்தை வாங்கி வாருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

வெள்ளி வெற்றிலைப் பெட்டியுள்பட மற்றச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு மாமா கும்பகோணம் வந்தார்.

''இந்தா, உன்சாமான்'' என்று அவனிடம்கொடுத்தார்.

''முதலிலே சாமான் இல்லை என்றீர்களே, இப்போ எங்கிருந்து வந்தது, மாமா?'' என்று கேட்டான் கிட்டு.

''எனக்கு என்ன, எடுக்க உரிமை இல்லையாடா?'' என்றார் மாமா.

''பின்னே ஏன் வந்தீர்கள்?'' என்றான் கிட்டு.

''என்னுடைய கடிகாரத்தை ஏண்டா நீ எடுத்துவந்தாய்? இன்னமும் உன் விஷமப்புத்தி போகவில்லையே'' என்று அதட்டினார் மாமா.

''எனக்கு என்ன, அதை எடுக்க உரிமை இல்லையா மாமா?''

''சொல்லாமல் எடுப்பதாடா உரிமை?''

அதற்கு அவன், ''நீங்களே குழந்தை போல் என் சாமானைத் தூக்கிக் கொண்டு போகும்போது ஏன் நான் மட்டும் எடுக்கக் கூடாது?'' என்றான்.

''அடேய், கடிகாரம் இல்லாமல் மணி தெரியவில்லை என்று மாமி கோபிக்கிறாள். ஆதலால் தயவு செய்து கொடுத்துவிடு. உனக்குப் புண்ணியம் உண்டு'' என்று அவர் கெஞ்சத் தொடங்கிவிட்டார்.

கிட்டுவுக்கும் அவரை அழவைத்தது போதும் என்று பட்டது. ''நீங்கள் எப்படி உங்கள் பொருளை அவசியமாய்க் கருதுகிறீர்களோ, அதைப் போல்தானே மற்றவர்களும் தங்கள் பொருள்களைக் கருதுவார்கள்? ஒருவரிடம் பணத்தைக் கேட்டாலும் கேட்கலாம். பொருளைக் கேட்கக் கூடாது என்பது தெரியாதா, மாமா? அப்படியே பொருளின்மீது ஆசை இருந்தாலும் கேட்காமல் எடுத்துச் செல்வது மன்னிக்க முடியாத குற்றம் இல்லையா?'' என்று கிட்டு ஒரு பெரிய பிரசங்கமே செய்து விட்டு அந்தத் தங்கமான கடிகாரத்தைக் கொடுத்தான். அப்போதுதான் கிட்டுவும் பெரிய ஆள் என்பதை அவன் மாமா உணர்ந்தார். அதற்குப் பிறகு அடிக்கடி அவர் அங்கே வந்து காம்ப் போடுவதில்லை.



வளைய விளையாட்டு

இந்த விளையாட்டில் இரட்டைப் படை எண் உள்ள எவ்வளவு பையன்களானாலும் கலந்துகொள்ளலாம். முதலில் சுமார் இருபது அடி விட்டமுள்ள கோழி முட்டை வடிவமான ஒரு வட்டம் போட்டுக்கொள்ள வேண்டும். பிறகு அந்த வட்டத்தின் விளிம்பில் இருவர் மட்டும் நிற்கப் போதுமான அளவுள்ள ஏழெட்டு சிறு வட்டங்கள் போட்டுக்கொள்ள வேண்டும். முதல் வட்டத்தில் மூன்று பையன்கள் ஒருவர் பின் ஒருவராக நிற்கவேண்டும். ஒரு பையன் வட்டத்தின் வெளியில்தான் நிற்க வேண்டியிருக்கும். மீதி எல்லாப் பையன்களும் வட்டத்திற்கு இருவராக நிற்கவேண்டும். உதாரணமாக, பதினான்கு பையன்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆறு சிறு வட்டங்கள் தேவை. முதல் வட்டத்தில் மூன்று பையன்களும் மீதி ஐந்து வட்டத்திலும் பத்துப் பையன்களும் நிற்பார்கள். ஒருவன் மட்டும் தனியாக நிற்பான். தனியாக நிற்பவன், முதல் வட்டத்திற்கு இருபது அடி தூரத்தில் நின்றுகொண்டு மூன்று பையன்களில் வட்டத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருக்கும் பையனை ஓடித் தொடவேண்டும். ஆனால் அந்தப் பையன் இவன் தொடுவதற்குள் இருவர் நிற்கும் இன்னொரு வட்டத்திற்கு ஓடிப்போய் முன்னாலோ பின்னாலோ நிற்பான். உடனே பிடிக்கும் பையன் அந்த இடத்திற்கு ஓடுவான். ஆனால் அங்கே கடைசியில் நின்றிருக்கும் பையன் ஓடி வந்த பையனுக்கு இடம் கொடுத்து விட்டு இன்னொரு வட்டத்திற்கு ஓடிப் போய் விடவேண்டும். 'பிடிக்கும் பையன்' அங்கே ஓடுவான். கோட்டிற்கு வெளியில் நிற்கும் பையனைத் தொட்டுவிட்டால் அவன் தான் மறுபடி மீதிப்பேரைப் பிடிக்கவேண்டும். கடைசி வரையில் பிடிபடாமல் இருப்பவன் ஜயித்தவன். பிடிக்கும் பையன் வட்டத்தைச் சுற்றித்தான் ஓடவேண்டும். வட்டத்தில் நிற்பவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓடித் தப்பித்துக் கொள்ளலாம். எங்கே, ஆடிப் பாருங்கள்!

—சுகுமார்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(K)348. கிருஷ்ணன், சுபத்திரா, T. V., கர்நூல். 349. கமலம், அமேலு, திருவெண்ணெய்நல்லூர். 350. கதிர்வேலு, கனகசபாபதி, சுளிபுரம். 351. கலீல், M.H.S.A., கொழும்பு. 352. கிருஷ்ணதாஸ், N., பறங்கிப்பேட்டை. 353. கிருஷ்ணன், J., சென்னை-18. 354. கணபதி பிள்ளை, S., யாழ்ப்பாணம். 355. கமலாக்ஷி, L., (விலாசம் எழுதவில்லை). 356. குமரன் இளைஞர் சங்கம், சிக்கல். 357. கிருஷ்ணன், பத்மா, R., சென்னை-4. 358. கோகிலா, R., சங்கரை. 359. குத்தாலலிங்கம்., திருக்குற்றாலம். 360. கருப்புசாமி, S. L., சொரியாம்பாளையம். 361. கண்ணன், R., குடியாத்தம். 362. கனகராஜன், A., ஜலகண்டபுரம். 363. கண்ணம்மாள், T., சாத்தூர். 364. குமார், N. J., பீளமேடு. 365. கிருஷ்ணன், T., சேலம். 366. கல்யாணராமன், G. V., சென்னை-4. 367. கேசவன், மாதவன், T., சேத்துப்பட்டு. 368. கிருஷ்ணன், V., சென்னை-4. 369. கிருஷ்ணன், N. K., நம்பியூர் 370. கிருஷ்ணமூர்த்தி, வாசு, கஜபதி, மாணிக்கம், ஆறுமுகம், M. G., சென்னை-1. 371. கனகம், V., சென்னை-10. 372. கிருஷ்ணன், C. V., சென்னை-17. 373. கோடீஸ்வரன், சரஸ்வதி, செல்வமணி, T., சென்னை-18. 374. கனகராஜன், சரோஜா, R., தூத்துக்குடி. 375. கந்தசாமி, கொழும்பு. 376 குப்புசாமி, R., சென்னை-21. 377. கண்ணபிரான், M. D., சென்னை-21. 378. குப்புசாமி, ஜயா, S.N., பரமக்குடி. 379. குஞ்சம்மாள், காங்கயம். 380. கண்ணன், K., திருவண்ணாமலை. 381. கிச்சா, சென்னை-4. 382. காந்தி, ராம சுந்தர், S., புதுடில்லி. 383. கிருஷ்ணசாமி, P.N., (விலாசம் எழுதவில்லை). 384. காசி விஸ்வநாதன், S., பாளையங்கோட்டை. 385. கார்த்திகேயன், V., கோயில்பட்டி. 386. குப்புசாமி, K., சின்னத்திபாளையம். 387. கமலா, K., கும்பகோணம். 388. காமாக்ஷி, M. S., சென்னை-1. 389. கிருஷ்ண ராஜு, K. T., புத்தூர். 390. கண்ணன்,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர்.....................

விலாசம்.....................

....

பிறந்த தேதி.....................

(தேதி, மாதம், வருஷம்)

டிச '52 கூபன் நெ:

S., கோயம்புத்தூர். 391. கண்ணன், L., தஞ்சாவூர். 392. கோதண்டராமன், O. P., சென்னை-14. 393. கலீல், S.I M., கண்டி. 394. கோதண்டபாணி, சென்னை-1. 395. கிருஷ்ணமூர்த்தி, M. S., சென்னை. 396. கேசவலு, R., திருச்சி. 397. கண்ணப்பன், M., காரைக்குடி. 398. குமார், K. N., போதனூர். 399. கமலநாதன், V. R., சென்னை-1. 400. கண்ணன், S., சென்னை-4. 401. கிருஷ்ணன், K., நம்பியூர். 402. கிருஷ்ணவேணி, K., சித்தரஞ்சன். 403. கிருஷ்ணன், சுபத்திரா, T. V., கர்நூல். 404. குப்புசாமி, S., சேலம். 405. கைலாசம், T. K., தாரமங்கலம். 406. குப்புசாமி, லக்ஷ்மி, N. C., சென்னை-17. 407.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய இரண்டு மாதக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

கல்பகம், V., சென்னை-18. 408. காமராஜ், பெரியண்ணன், M., கீழவெளியூர். 409. கிருஷ்ணமூர்த்தி, சங்கரன், சாமி, M. K., பரமக்குடி. 410. கிருஷ்ணன், T., சேலம். 411. கிருஷ்ணமூர்த்தி, S., சென்னை-4. 412. கிருஷ்ணமூர்த்தி, V., தஞ்சாவூர். 413. கிருஷ்ணன், தியாகராஜன், சென்னை-4. 414. காஜாமொகைதீன், முக்கன்னம்பட்டி. 415. கஸ்தூரி, V., சென்னை-4. 416. காளிமுத்து, K., பிறவிப்பாளையம்.

(M) 176. மாலினி, C.S., சென்னை - 4. 177. மதுரை, P.S., சென்னை - 14. 178. மகமத் ஆலி, A., அநுராதபுரம், சிலோன். 179. மாரியப்பன், M., இஞ்சிக்குடி. 180. மாணிக்கவாசகம், A.E., அரங்கநூர். 181 முத்து, M., அரிமளம். 182. மணிசேகரன், N., மதுராந்தகம். 183. மனோகரன், A., வேலூர். 184. முகம்மதப்பா, K., செங்கோட்டை. 185. முருகேசன், K.P., கொங்கணபுரம். 186. மோகனசுந்தரம், T.V., சென்னை-14. 187. மஞ்சுளாதேவி, சிகந்தர், M., விருதுநகர். 188. மனோகரன், V., சென்னை - 1. 189. முருகன், V.S., மாரண்டஹள்ளி. 190. மூர்த்தி, ஜயராமன், V.N.K., சென்னை - 17. 191. மணி, கிருஷ்ணசாமி, I., செங்கோட்டை. 192. மணி, R., சென்னை - 2. 193. முருகநாதன், A., வாலம்பாளையம். 194. மணி, விஜயா, N S., ஜாம்ஷெட்பூர். 195. மீனுக்ஷி, K., பருத்தித்துறை, சிலோன்.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

அபாயச்சங்கு

'நீலம்'

5

நாளுக்கொரு கலாட்டா

'அபாயச் சங்கு' படுக்கையை விட்டெழுந்தான். மாமா எங்கே என்று மாமியைக் கேட்டான். ஏதோ அவசரமான 'கேஸ்' விஷயமாக மாமா விடியற்காலை ரெயிலில் ராஜபாளையம் போயிருப்பதாயும், விஷமங்கள் செய்யாமல், ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரித்து விட்டுப் போனதாகவும் மாமி தெரிவித்தாள். "எப்போ திரும்பி வருவார் மாமி?" என்று கேட்டான். "ரகு, எப்போது என்று எப்படிச் சொல்வது? நாளைக்கே கூட வரலாம்" என்று மாமி சொன்னாள்.

முந்திய நாள் சம்பவத்தைப்பற்றி இனிமேல் பேச்சு இராது. ஆகவே கவலையில்லாமல் இருக்கலாம். பள்ளிக்கூடமும் இரண்டு நாளைக்குக் கிடையாது. சந்தோஷத்துடன் பல் துலக்கப் பின்கட்டுப் பக்கம் போனான் அவன்.

கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்கச் செம்பை எடுத்தான். வேறு எங்கேயோ கவனமாகத் தாம்புக்கயிற்றைச் செம்பில் மாட்டியபோது, செம்பின் கழுத்தில் கயிற்றின் சுருக்கு விழாமல் 'தடார்' என்று செம்பு கேணியில் விழுந்து விட்டது. இது தெரிந்தால், பொழுது விடிந்ததும் விடியாததுமாக வீட்டில் ஒரு கலாட்டா ஏற்படப் போகிறதே என்று எண்ணி அபாயச் சங்கு 'கம்'மென்று இருந்துவிட்டான். மாமிக்கும் இதைப்பற்றிச் சொல்லவில்லை. மாமி அவனுக்குச் செல்லம் கொடுத்தாலும் ஏதாவது சொல்வாளோ என்று அவனுக்குப் பயம்.

காபி குடித்துவிட்டு வாசல் பக்கம் போனான். 615, 98 இருவரும் அங்கே காணப்படவில்லை. 'தன்னை ஆபத்தில் மாட்டிவைத்த அந்த மத்தாப்புக்குச்சிகள் எங்கே தொலைந்தால் என்ன?' என்று நினைத்துத் திண்ணையில் உட்கார்ந்தான். கை சும்மா இருந்தால் தானே? தூணில் மிருதங்கம் வாசிப்பது போலத் தாளம் தட்டிக் கொண்டிருந்தான். பொழுதோ போவதாகத் தெரியவில்லை.

எதிர்ச் சாரியிலிருந்த பாகவதர் வீட்டின் முன்பாக ஒரு பசுமாட்டைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு, வைக்கோலினால் செய்த கன்றுக்குட்டியையும் அதனருகே நிறுத்தினான் ஒரு சிறு பையன்.

பிறகு ஒருவன் அங்கே வந்து பால் கறக்க ஆரம்பித்தான். இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் அபாயச் சங்கு. வைக்கோல் கன்றுக்குட்டியை நிஜக்கன்று என்று எண்ணிய பசு, அதை நக்கிக் கொண்டிருந்தது. வெளியே தெரிந்த வைக்கோலையும் அது

தின்றது. இந்தக் காட்சி அபாயச் சங்குக்கு விநோதமாயிருந்தது. பால் கறப்பவனோடு வந்த சின்னப் பையன் ஒரு குவளையிலிருந்து அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே பால் இருந்த குவளை யில் கடகடவென்று தண்ணீரைக் கொட்டினான்!

'என்ன அநியாயம் இது? கன்றுக் குட்டி என்று போலிக் கன்றைக் காட்டிப் பசுவை ஏமாற்றுகிறார் கள்! பால் என்று தண்ணீரைக் கொட்டிக் கலந்து வாடிக்கைக் காரர்களை ஏமாற்றுகிறார்கள்! இந்த மோசடிகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு மன்னிக் கிறார்கள்! நாம் ஏதாவது செய்தால் அதை மிகப் பிரமாதப்படுத்துகிறார் கள். ஹும்!' என்று அபாயச்சங்கு மனசுக்குள் எண்ணினான். உடனே ஒரு விசித்திர யோசனையும் கூடவே தோன்றியது.

"ஏ தபால்கார ஐயா! எங்க வீட்டுக்குப் பால் கிடையாதா?" என்று மாடு கறந்தவனைப் பார்த் துக் கிண்டலாகக் கேட்டான். பையன் தன்னைத் தண்ணீரில் பாலைக் கலந்ததற்குக் கேலி செய்த தைப் புரிந்துகொண்டான் அவன். அவனுக்குக் கோபம் வந்தது. "யாரைப் பாத்தப்பா தபால்காரர் என்கிறே? என்னைப் பார்த்தா அப்படியா உன் கண்ணுக்குத் தோணுது!" என்று தன் குட்டு வெளியாகிவிடும் என நினைத்த அவன் சண்டைக்கு வந்துவிட் டான். வாசலில் ஏதோ கூச்சல் கேட்டதை அறிந்து எதிர்வீட்டுப் பாகவதர் வெளியே வந்தார்.

"பாகவதர் மாமா! இந்தப் பையனை நிறையத் தண்ணீரைக் கொண்டு வரச் சொல்லி அதிலே அந்தப் பாலைக் கொட்டி உங்க வீட்டுக்குக் கொடுத்ததை நான் இங்கே உட்கார்ந்தபடியே பார்த் துக்கொண் டிருந்தேன். அவனை நான் தண்ணீரில் பாலைக் கலந்த தற்காகத் 'தபால்காரரே' என்று கூப்பிட்டேன். இது ஒரு தப்பா" என்றான் அபாயச் சங்கு. சென்னை வழக்கப்படி தெருவில் ஒரே கூட் டம் கூடிவிட்டது.

உண்மை வெளிப்பட்டுப் போன தால், பால்காரன் அபாயச்சங்கின் மேல் அபாரமாக ஆத்திரப் பட்டான். ஆனால் எதிர் வீட்டுப் பாகவதர் வாடிக்கையை அவன் இழந்துவிட்டான்! மாமி வெளியே வந்தபோது விஷயம் தெரிந்தது. பால்காரன் கண்டபடி திட்டிக் கொண்டிருந்தான்.

அபாயச்சங்கின் போக்கு எதிர் வீட்டுப் பாகவதருக்கும் பிடிக் காதுதான். இருந்தாலும் அவன்

த-பால்காரர் என்றால் தண்ணீர் விடும் பால்காரர் என்று புது அர்த்தம் சொன்னபோது அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

இந்த வீண் வம்புக்காக மாமி அபாயச் சங்கைக் கண்டித்தாள்.

இது அன்று காலையில் நடந்த சம்பவம். பிற்பகலில் ஒழிந்தாற்போல் மாமியோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது, "மாமாவிடம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லாதே மாமி" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

மறுநாள் மாலை சுமார் மூன்று மணி இருக்கும். மாமி பக்கத்து வீட்டுக்கு ஏதோ காரியமாகப் போனாள். அபாயச் சங்கை ஜாக்கிரதையாகத் திண்ணையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும்படி கூறிச் சென்றாள்.

அவள் போய் ஐந்து நிமிஷம்கூட ஆகியிராது. "கேணி முழுகுகிறது, கேணி" என்று கூவியபடி ஒரு கறுத்த ஆசாமி சாலையோடு

நடந்து போனான். அபாயச் சங்கு சும்மா இராமல் அவனைக் கையைத் தட்டிக் கூப்பிட்டு விசாரித்தான். கேணி முழுகுகிறது என்றால் கேணியில் மூழ்கி அதனுள் விழுந்ததை எடுப்பது என்று தெரிந்து கொண்டான்.

"நல்லகாலம், கேணிதான் எங்கேயாவது போய் முழுகுகிறதோ என்று பார்த்தேன். அது சரி; கேணியில் மூழ்கி, அதில் விழுந்த செம்பை எடுப்பாயா?" என்று அபாயச் சங்கு அவனைக் கேட்டான். நாலு அணாக் கொடுக்கும்படி சொன்னான் அவன்.

அபாயச் சங்கின் கையிலோ ஓரணாத்தான் இருந்தது. பாக்கி மூன்றணாவுக்கு என்ன செய்வது? கொஞ்சம் கூலியைக் குறைத்துக்கொள்ளும்படி கேட்டுப் பார்த்தான். அவன் ஒப்புக்கொள்ளவில்லை. செம்பை யாருக்கும் தெரியாமல் எடுக்க வேண்டும். ஆகவே வேறு வழியின்றி, "சரி, இறங்கி எடு" என்று அபாயச்சங்கு அவனிடம் சொல்லிவிட்டான். செம்பை முதலில் எடுத்துவிட்டால், பிறகு அவனை எப்படியாவது சரிப்படுத்தி, ஓரணாவைக் கொடுத்து அனுப்பி விடலாம் என்று எண்ணினான் அவன்.

கேணியில் மூழ்குபவன் கிணற்றில் மூழ்கிச் செம்பை வெளியே எடுத்தான். அதைக் கேணியின் கைபிடிச்சுவர்மேல் வைத்துக் கொண்டபடியே, "துட்டை எடு, தம்பி" என்றான்.

அபாயச் சங்கு அவனிடம் ஓரணாவை நீட்டினான். பாக்கி மூன்றணாவையும் கொடுத்தால் தான் ஆயிற்று என்று அவன்

அபாயச் சங்கு கூறவே, எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

அபாயச் சங்கின் கிண்டல் பேச்சைக் கேட்டுக் கேணி மூழ்கியவனுக்கே சிரிப்பு வந்தது. "தம்பி, நீ பெரிய கிண்டல் பிடித்த போக்கிரியாய் இருப்பாய் போலிருக்கே" என்று ஓரணாவை வாங்கிக் கொண்டு செம்பைக் கொடுத்துவிட்டுப் போனான். வெளியே போயிருந்த மாமிக்கு விஷயம் தெரிந்ததும் மிகுந்த வேதனைப்பட்டாள்.

அபாயச் சங்கு, செம்பு விழுந்ததைப் பற்றியும் அதைச் சாமர்த்தியமாகவும் மலிவாகவும் வெளியே எடுத்துவிட்டது பற்றியும் நினைத்துச் சந்தோஷப் பட்டுக்கொண்டு உள்ளே வந்தான்.

ஓறினான். இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம் என்று அவனிடம் அபாயச் சங்கு மன்றாடிப் பார்த்தான். அவனோ கேட்கும் வழியாக இல்லை. ஏகமாகக் கூச்சல்போட்டான்.

வீட்டுப் பின்புறத்தில் ஏதோ சத்தம் கேட்கிறதே என்று அக்கம்பக்கத்தவர்கள் ஒருவர் ஒருவராக அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

"ஏனப்பா, வீணாகச் சத்தம் போடறே? வேணுமானால் இந்தா ஓரணா. இல்லையானால் செம்பைக் கிணற்றிலேயே வேண்டுமானால் திரும்பவும் போட்டுவிடு!" என்று

நேற்றுக் காலையில்தான் தபால்காரன் என்று சொல்லி ஒரு தகராறு ஏற்பட்டு முடிந்தது என்றால், இன்றைப் பொழுதுக்கு மற்றொரு பரபரப்பை உண்டு பண்ணிவிட்டான் அபாயச் சங்கு!

மாலை மணி ஐந்து. வாசலில் 'பூம் பூம்' என்று ஒரு கார் வந்து நின்றது. இன்ஸ்பெக்டர் சுந்தரவதனம்தான் அதிலிருந்து இறங்கினார். அவர் பின்னால் ஓர் அழகான வெள்ளை நாய்க்குட்டியும் கீழே குதித்து அவருக்கு முன்னால் வீட்டுக்குள் ஓடியது.

(தொடரும்)

வீரர் வினு மன்காட்

★

கொஞ்ச நாளைக்கு முன்னால் கிரிக்கெட் அபிமானிகள் எல்லாரும் வருத்தப்பட்டார்கள். கிரிக்கெட் என்றால் பைத்தியம் பிடித்ததுபோல இருக்கிற நீங்கள் எல்லோரும் வருத்தப்பட்டீர்கள். இந்திய கிரிக்கெட் போர்டு வருத்தப்பட்டது. இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் எல்லாருமே ரொம்ப வருத்தப்பட்டார்கள். வேறு நாட்டைச் சேர்ந்த சிலர் வருத்தப் பட்டிருப்பதற்குப் பதில் சந்தோஷமும் கொண்டிருக்கலாம். அது நமக்குத் தெரியாது. அப்படி ஒரேயடியாக எல்லாரும் வருத்தப்படும்படியான காரியம் என்ன நிகழ்ந்துவிட்டது என்று கேட்பீர்கள். அதைத்தான் சொல்லப் போகிறேன்.

இந்தக் கிரிக்கெட் ஆட்டத்தில், பந்து அடிப்பதிலும் பந்து வீசுவதிலும் சரி, பிடிப்பதிலும் சரி, மகா நிபுணரான மகாராஷ்டிர வீரர் வினு மன்காட் இருக்கிறாரே, அவர்தான் அப்படி நம்மையெல்லாம் வருத்தக் கடலில் மூழ்கும்படி செய்தவர். பந்தை அற்புதமாக வீசி விக்கெட்டை ஒரே வீழ்த்தாக வீழ்த்துவது போல் ஒரு செய்தியைத் தூக்கி நம்மீது வீசிவிட்டார். அந்த வீச்சில் நாம் ஒரேயடியாக விழுந்து விட்டோம். விழுந்து வருத்தப்பட்டோம். இந்த 1952-ஆம் வருஷத்திடம் அவருக்கு என்ன கோபமோ தெரியவில்லை. ''இனி நான் இந்த வருஷத்திலே கிரிக்கெட் பந்தய ஆட்டங்களில் கலந்து கொள்ளப் போவதில்லை. அதிலிருந்து ரிடையராகி விடப்போகிறேன்'' என்று சொல்லிவிட்டார். அதைக் கேட்டதுதான், நாம் உடனே கலங்கி வருத்தப்பட்டோம். இந்த வீரர் அணுக்குண்டு வீசுவது போல் சொல்லிவிட்டாரே, அது ஏன் என்பது நமக்குப் புரியவில்லை. கிரிக்கெட் போர்டாருக்கும் புரியவில்லை. கடைசியில் ஏதோ அதற்கு ஒரு காரணத்தைக் கண்டார்கள். அந்தக் காரணத்துக்குக் கோபம்தான் ஆதாரமாக இருந்தது. அந்தக் கோபத்துக்கும் கிரிக்கெட் ஆட்டத்துக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்தது. "உங்களுடைய கோபம்

நியாயமானதுதான். ஆனால் கிரிக்கெட் பந்தயத்துக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஆகையால் தயவு செய்து உங்கள் முடிவை உடனே மாற்றிக் கொண்டு ஓர் அறிக்கையும் விடுங்கள்'' என்று கிரிக்கெட் போர்டார் வற்புறுத்த வேண்டும் என்று எல்லாரும் சொல்லத் தொடங்கினுர்கள்.

இந்தியாவின் பெருமையையே காப்பாற்றும் இரண்டே இரண்டு ஆட்டக்காரர்களை இன்று குறிப்பிடச் சொன்னுல் வினு மன்காடையும் ஹஸாரேயையும்தான் யாரும் குறிப்பிடுவார்கள். பௌலிங், பாட்டிங் இரண்டிலுமே இவர்கள் மகா சூரர்கள். அதிலும் மன்காட் தன் திறமையைச் சமீபத்தில் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறுர். புதுடில்லியில் இந்தியா கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் நடந்த டெஸ்ட் மாட்சில் 130 ரன்களே கொடுத்து 13 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தி ரஸிகர்களின் பாராட்டைப் பெற்றுர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பம்பாயில் நடந்த மூன்ருவது டெஸ்ட் மாட்சில் வினு மன்காட் நாமெல்லாம் பிரமிக்கும்படி ஓர் அதிசயத்தைச் சாதித்திருக்கிறுர்.

கிரிக்கெட் சரித்திரத்திலேயே யாரும் இதுவரை அத்தகைய பெருமையை அடையவில்லை. அந்தப் போட்டியில் அவர் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி, பிராபோர்ன் ஸ்டேடியத்தையே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டார். அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் அவர் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தியது மட்டுமில்லை. அவர் கிரிக்கெட் பந்தய ரிக்கார்டு ஒன்றையே மாற்றிவிட்டதுதான் அதற்குக் காரணம். வினு மன்காட் இதுவரையில் மொத்தம் 23 டெஸ்ட் மாட்சுகளில் கலந்துகொண்டிருக்கிறுர். இதுவரை மொத்தம் ஆயிரம் ரன்கள் எடுத்திருக்கிறுர். 100 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறுர். இப்படி ஒரு மகத்தான இரட்டை வெற்றி பெற்ற ஆட்டக்காரர் இவர் ஒருவர்தான். ஒன்று, ஆயிரம் ரன்கள் போல எடுத்தவர்கள் இருக்கிறுர்கள்; இல்லாவிட்டால் நூறு விக்கெட்டுகளுக்குமேல் எடுத்தவர்கள் இருப்பார்கள். இரண்டும் சேர்த்து இப்படி ஒரு வெற்றி பெற்றவர் அதுவும் 23 டெஸ்ட் மாட்சுகளில் மட்டும் கலந்து கொண்டு எடுத்தவர் யாருமே இல்லை. இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எம். ஏ. நோபிள் என்பவர் 27-ஆவது டெஸ்ட் மாட்சில் இத்தகைய ஓர் இரட்டை வெற்றி பெற்று ஒரு ரிக்கார்டை ஏற்படுத்தியிருந்தார். வீரர் வினு மன்காட் 23- டெஸ்டுகளிலேயே இந்த வெற்றியைப் பெற்றது ஓர் அரிய சாதனை. வில்பெர்ட் ரோட்ஸ், மாரிஸ் டேட், ஜியார்ஜ் கிப்பின் முதலானேர் இத்தகைய வெற்றி அடைய இருக்கிறுர்கள். வினு மன்காட் முந்திக்கொண்டு விட்டார்.

35 வயது நிரம்பிய மன்காட் இந்தியாவின் பெருமைக்கே எடுத்துக்காட்டாக இருப்பவர். சென்ற வருஷம் இங்கிலாந்து சென்ற கோஷ்டியில் முதலில் மன்காட் இல்லை. அதனுல் வெற்றியும் ஏற்படவில்லை. பிறகுதான் மன்காட் வந்து கலந்துகொண்டார். வெற்றியும் கிடைத்தது. ஓர் ஆங்கிலேயரே சொல்லியது போல் மன்காட் இல்லை என்ருல் அது டெஸ்ட் மாட்சே இல்லை என்று சொல்லிவிடலாம்.

வெண்ணெய் மாளிகை

திருச்சி அண்ணா

திருவெண்ணெய்க்கோட்டை என்ற நாட்டில், வெண்ணெயாளன் என்ற அரசன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. நெய்யழகி என்பது அவளுடைய பெயர்.

மன்னன் மகளுக்கு வெண்ணெய் என்றால் உயிர். எப்போதும் கிண்ணம் கிண்ணமாய் வெண்ணெய் விழுங்குவாள்!

மகள் கீறிய கோட்டை அரசன் மீறமாட்டான். சதா அவளோடுதான் அவனுக்கு விளையாட்டு!

ஒரு நாள், கிழமந்திரி அரசாங்கக் காரியமாக அரசனோடு பேசவேண்டி இருந்தது. மன்னனிடம் வந்து நின்றார். அரசன் கவனிக்கவேயில்லை.

கால் கடுக்க நின்றுவிட்டு, கிழ மந்திரி திரும்பினார். அரசன் அவரை அழைக்கவில்லை; விளையாட்டிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தான்.

மறுநாளும் கிழமந்திரி அரசனை நாடிவந்தார். அரசனோ பாண்டி விளையாடிக்கொண்டிருந்தான்.

இன்னொரு நாள் அரசன் தட்டாமாலை சுற்றி வந்தான்!

அரசாங்க அலுவல் அரசனை அழைத்தது. தர்பார் மண்டபம் அவனை எதிர்நோக்கித் தவம் கிடந்தது. ஆனால் அரசன் வருவதாக இல்லை. நெய்யழகிக்குப் பல புது விளையாட்டுக்கள் காட்டுவதிலேயே பொழுதுபோக்கி வந்தான்.

திடீரென்று ஒரு நாள் அரசன் தர்பார் மண்டபத்துக்குள் பிரவேசித்தான். கடிவாளம் கட்டிய குதிரை போலக் கனைத்துக் கொண்டு வந்தான்! அவனைக்

குதிரையாக்கி நடத்தி வந்தவள் அரசகுமாரி. சபையில் உள்ளவர் இக்காட்சியை எதிர்பார்க்கவே இல்லை. அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்!

"மந்திரி!" என்ருன் அரசன். திடுக்கிட்டுத் திரும்பினுர் கிழ மந்திரி. அரசன் சொல்வான்: "நமது குழந்தை நெய்யழகிக்கு வெண்ணெய் என்ருல் நிரம்பப் பிரியமுண்டு. இன்று காலையில் அவள் வெண்ணெய் உண்ணும்போது, தனக்கு ஒரு வெண்ணெய் மாளிகை கட்டித் தரவேண்டுமென்று கேட்டாள். ஆகையினுல்-"

மன்னன் முடிக்கும் முன்னரே, சபையில் சலசலப்பு உண்டாயிற்று. "என்ன, வெண்ணெய் மாளிகையா!" என்று அதிசயத்துடன் வாயைப் பிளந்தார் ஒரு பிரபு.

"ஆமாம்" என்ருன் அரசன்.

"அது எவ்வாறு சாத்தியமாகும்?" என்று ஒரு கேள்வியை எழுப்பினுர் மற்ருெருவர்.

"சூரிய வெளிச்சம் பட்டவுடனேயே வெண்ணெய் மாளிகை உருகி ஓடிவிடுமே!" என்ருர் பின்னுமொருவர்.

இது கேட்ட அரசகுமாரி தணலில் இட்ட வெண்ணெய்போல உருகத் தொடங்கினுள். அழுகை அழுகையாக வந்தது அவளுக்கு. அரசனுக்கும் அழுகை வரும்போல் இருந்தது. ஆனுல் அதை முந்திக் கொண்டது கோபம்.

"என்ன மந்திரி, என் வாளா இருக்கிறீர்? கட்டி வெண்ணெய் போல மாளிகை கட்டியாக வேண்டும். உம்மால் முடியுமா, முடியாதா?"

இதுகாறும் தாடியை உருவியபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த கிழ மந்திரி புன்சிரிப்புடன் நிதானமாக, "வேந்தே, வெண்ணெய் மாளிகைதானே வேண்டும்? ஆகா, அழகான மாளிகை எழுப்பிவிடலாம். இதில் சிரமம் ஒன்றுமே இல்லை" என்ருர்.

கிழ மந்திரியின் உரைகளைக் கேட்ட நெய்யழகி மனம் களித்தாள். பொங்கி வரும் நெய்யைப் போல் உற்சாகம் பொங்கியது.

கிழமந்திரி மேலும் சொன்னுர்: "மகாராஜா, இந்தப் புவனத்துப் பறவைகளை எல்லாம் வரவழைத்து, அவைகளைச் சிறகு விரித்து, வானவெளியிலே வளைய வரச் செய்தால், பரந்த நிழல் தோன்றிவிடும். அந்தக் குளிர்ந்த நிழலிலே நாம் வெண்ணெய் மாளிகையை நிர்மாணித்துவிடலாம்!"

"நல்ல யோசனை. இந்தக் கணமே வேலை ஆரம்பமாகவேண்டும். ஆவன செய்யுங்கள்!" என்று அரசன் கூறிவிட்டுக் குதிரை போலக் கனைத்துக்கொண்டு ஓடி ஓடி மறைந்தான்.

மறு நாள்!

நாடெங்கும் பறை முழங்கியது. காடும் மேடும் எதிரொலி செய்தன.

இது கேட்ட பறவை இனங்கள் பறந்தோடி வந்தன. காடை வந்தது. கௌதாரி வந்தது. குயில் வந்தது. கொக்கு வந்தது. காட்டுக் கிளிகள் வந்தன. சாடை தெரிந்து காகங்கள் வந்தன. சர்ரி சாரியாய் வந்தன புருக்கள். ஓடி வந்தன கோடிப் பறவைகள்.

வானவெளியிலே அவை வளைய வந்தன. நெருக்கம் நெருக்கமாய்ப் பறந்து திரிந்தன. வான வீதியில் பந்தல் விரிந்தது. சூரியன் மறைந்தான். எங்கும் இனிய நிழல் படர்ந்தது. அந்தக் குளிர் நிழலில்,

வெண்ணெய் மாளிகை கட்டத் தொடங்கினர்.

நாட்டின் நான்கு திசைகளி லிருந்தும் குடம் குடமாகப் பால் வருகிறது! பாலைக் காய்ச்சி உறை குத்துகிறார்கள். பெரிய பெரிய அண்டாக்களில், தாழி களில் தயிரைக் கொட்டி, கயிறு பிடித்துக் காளைகள் இழுக்க, மத் துக்கள் யாவும் ஓசை எழுப்பின. 'சர், சர்' என்று சீறின மத்துக்கள் எல்லாம்! வெண்ணெய் திரண்டு வருகிறது; கட்டி கட்டியாக வெண்ணெய்!

அஸ்திவாரம் எழுப்ப ஆயத்தம் செய்கிறார்கள். அதே சமயம் எங் கிருந்தோ ஒளிக்கதிர் ஒன்று பாய் கிறது. சிறகுகளின் ஊடே உண் டான சந்து வழியாகப் பாய்ந் தோடி வந்த கிரணம், கிழ மந்திரி யின் தாடியில் பட்டுப் பளபளத் தது!

கிழ மந்திரி நிமிர்ந்து நோக்கி னார். அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. "நிறுத்துங்கள்!" என் றார் கிழ மந்திரி. ஆட்கள் எல்லா ரும் அப்படியே நின்றுவிட்டனர். என்னவென்று அறிய மன்னன் ஓடிவந்தான்.

கிழ மந்திரி சொன்னார்: "மகா ராஜா, எல்லாப் பறவைகளும் தங்களது ஆக்ஞை அறிந்து வந் திருக்கும்போது, கருடன் மட்டும் வரவில்லை. அதோ பாருங்கள்! அதனால்தான் அங்கே காலி இடம் தெரிகிறது! கருடன் வந்த பின்னரே வேலை தொடங்க வேண்டும். அதுவரை விடுமுறை என்று விளம்பரப் படுத்திவிடுகி றேன்!" என்றார் கிழமந்திரி.

நெய்யழகி மனம் உருகினாள்; தேம்பித் தேம்பி அழ ஆரம்பித் தாள்! அரசனுக்குக் கோபம் எழும் பியது.

"ஓடுங்கள் சேவகர்களே! சாடுங் கள் நான்கு திசைகளிலும்! கருடனைக் கண்டால், கட்டி இழுத்து வாருங்கள்" என்று உத்தரவு போட்டான்.

உடனே திக்குகள் எங்கும் பறந் தனர் ஆட்கள்!

கீழ்த்திசை சென்றவர்கள் மூன்றாம் நாள் கருடனைச் சந்தித் தார்கள். கருடன் ஒரு பாறையின் மீது உட்கார்ந்து ஏதோ யோசனை யில் ஆழ்ந்திருந்தது.

அரண்மனைச் சேவகனைக் கண்ட தும், "வாரும் சேவகரே, என்னை அழைத்துப் போகத்தான் புறப் பட்டு வந்தீரா? நல்லது. முன்ன தாக நானே வந்திருப்பேன். ஆனால் அவசரமான வேலை இருக் கிறது. அதை முடித்துக்கொண்டு, இன்னும் இரண்டு நாளில் வந்து சேருகிறேன்". என்றது கருடன். சேவகன் திரும்பினான்.

இதையறிந்த அரசனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனாலும் என்ன செய்வது?

மூன்றாம் நாள் காலையில், வந் தது கருடன். அரசன் சீறினான். "அடே கருடா, நமது உத்தரவை மீறிய காரணம் என்ன? உண்மை யைச் சொல். இல்லையேல்..."

கருடன் இடைமறித்துப் பேசி யது. "அரசே, ஆத்திரமடையா தீர். வேண்டுமென்றே நான் பின் தங்குவேனா? ஒரு விநோத வழக்கு வந்தது. அதனைத் தீர்த்துவிட்டு வருவதற்குள் தாமதமாகி விட்டது. மன்னித்துவிடுங்கள்!"

"என்ன வழக்கு அது?"

"யாரோ இருவர் பந்தயம் கட்டிக்கொண்டனர். உலகில் குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்களா அல்லது பெரியவர்களா என்று ஒரு வாக்குவாதம் எழுந்தது. குழந்தைகளே அதிகமென்று ஒருவர் வாதாடினார். பெரியவர்களே அதிகம் என்று மற்றவர் கருத்து. என் அபிப்பிராயம் கேட்டு, அதன்படி நடக்கத் தீர்மானித்து, அவர்கள் என்னை நாடி வந்தனர். நான் தீர்ப்புக் கூறுவதா அல்லது கூற மறுத்து விட்டு வருவதா? நீங்களே சொல்லுங்கள்!"

"கூறத்தான் வேண்டும். வாராய் கருடனே! உன் தீர்ப்பு என்ன? பெரியவர்கள் அதிகமா அல்லது குழந்தைகள்தான் அதிகமா?" என்று ஆவலோடு அரசன் விசாரித்தான்.

கருடன் சொன்னது: "மகாராஜா, சில ஆதார அநுமானங்களை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, குழந்தைகளின் எண்ணிக்கையே உலகில் அதிகமென்று எண்ண வேண்டியிருக்கிறது!"

"எப்படி?" என்று மன்னன் வினவினான்.

"என் ஆதாரங்களின் பிரகாரம், குழந்தைகள் மட்டுமே குழந்தைகளாகக் கருதப்படுவதில்லை. பெரியவர்களில் பலரும் குழந்தைகளாய் இருக்கிறார்கள். குழந்தைப் புத்தியோடு வாழ்பவர்கள் யாவரும் குழந்தைகள்தான்! செல்லப் பிள்ளை சொல்லைக் கேட்டுத் தன் சொந்தப் புத்தியை விட்டுக் கூத்தாடும் பெரியவர்களும் குழந்தைகளேதான்! ஆகவே, இந்த ஆதாரத்துடன் பார்க்கும்போது, உலகில் குழந்தைகளே அதிகமாய் இருக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது!" என்று முடிவு கூறியது கருடன்.

அங்கே கூடியிருந்தவரெல்லாம் கொல்லென்று சிரித்தனர். "மன்னனும் ஒரு குழந்தையேதான்!" என்று யாரோ பரிகசிப்பதுபோல அவனுக்குப் பிரமை ஏற்பட்டது!

அரசன் தன் தவற்றை உணர்ந்தான். வெட்கத்தினால் அவன் தலை கவிழ்ந்தது. மெதுவாகச் சமாளித்துக்கொண்டு அரசன் பேசினான்: "மந்திரியாரே, இங்கே கூடியிருப்பவர்களைப் போகச் சொல்லுங்கள். பறவை யாவும் பறந்து செல்லட்டும். இங்கே திரண்டிருக்கும் வெண்ணெய் ஏழை எளியவர்களுக்கு விநியோகம் நடக்கட்டும்! வாராய் கருடனே, உன் அறிவை மெச்சினேன். இன்று நடந்தது, அறிவுக்கு ஒரு சோதனை. அறிவு மிகுந்த உனக்கு 'அறிவுக் கதிர்' என்ற பட்டம் அளிக்கிறோம்!" என்று பிரகடனம் செய்தான் அரசன்.

மன்னனுடைய கண் திறந்தது; கடமையை உணர்ந்தான்! மக்களின் மனம் குளிர அரசு புரிந்தான்! அவன் மகளும் குணம் மாறி இன்பமாக வாழ்ந்தாள்.

கேட்டீர்களா!

கிரிக்கெட் புலி ஹனீப் முகம்மது

பார்க்கப் போனால் வயது பதினேழுதான் ஆகிறது. அடடா, என்ன அடி அடிக்கிறான், தெரியுமா? சக்கைப் போடுதான். ஒரு பந்தையாவது தவற விடுவதில்லை! எதிரே உலகப் புகழ் பெற்ற சிங்கமே வந்து பௌல் செய்யட்டுமே. பாகிஸ்தானைச் சேர்ந்த ஹனீப் கொஞ்சமாவது லட்சியம் செய்ய வேண்டுமே. தன் ஆட்டத்திலேயே கண்ணாக இருந்து பந்தை அடிக்கிறான். இந்தப் போக்கில் அடித்து முன்னேறிக்கொண்டிருந்தால் சீக்கிரத்திலேயே உலக ஆட்டக்காரரில் ஒருவனாக வந்துவிடுவான் என்பது நிச்சயம்!

அதிசயப் பெண்

குடகு நாட்டில் மெர்க்காரா என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கேதான் இந்த அதிசயப் பெண் இருக்கிறாள். பதினேழு வயதான இவளுடைய பெயர் தனலக்ஷ்மி என்பது இவள் மாதக் கணக்கில் சாப்பிடாமலே இருந்து வருகிறாள். பசியே எடுப்பதில்லையாம் இவளுக்கு. ஆனால் வீட்டுக் காரியங்களையெல்லாம் முக மலர்ச்சியுடன் செய்கிறாள். இப்படிச் சாப்பிடாமலே இருக்கிறாளே என்று கவலைப்பட்டு ஆகாரத்தைக் கொடுத்தால் உடனே அதை வாந்தி எடுத்துவிடுகிறாள். பல வைத்தியர் இவளைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். எல்லாருக்கும் இவள் உடல் நிலை ஒரு பெரிய புதிராக இருக்கிறது. நமக்குப் புதிராக மட்டுமல்ல; அதிசயமாகவும் இருக்கிறது.

நோபெல் பரிசு

1952-ஆம் வருஷத்து இலக்கியப் பரிசு பிராங்காய் மௌரியாக் என்ற பிரெஞ்சு நாவலாசிரியருக்குக் கிடைத்துள்ளது. இந்தியாவில் நோபெல் பரிசு பெற்ற அறிஞர்கள் இருவர். ஒருவர் கவியரசர் ரவீந்திரநாத டாகுர். இவருடைய கீதாஞ்சலி என்ற கவிதைத் தொகுப்பைப் பாராட்டி அளித்த இலக்கியப் பரிசு இது. இன்னொருவர் தென்னிந்தியரான சர் சந்திரசேகர வேங்கடராமன் ஆவார் 'ஒளிக் கிரணம்' என்ற புதிய விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்ததற்காக அளித்த விஞ்ஞானப் பரிசு.

நேருவின் பிறந்த நாள்

நவம்பர் மாதம் 14-தேதிதான் நம் இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாள். அந்த நாளை நாடெங்கும் கொண்டாடினார்கள். பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது எல்லாரும் அவருக்குப் பரிசுகள் அனுப்புவது வழக்கம். ஆனால் நேரு என்ன செய்தார் தெரியுமா? யாரும் கண்டிப்பாகத் தமக்குப் பரிசுகள் அனுப்பக் கூடாது என்று அறிவித்துவிட்டார். அந்தப் பரிசுகள் அனுப்புவதற்குப் பதில் சிறுவர்களுக்கே ஏதாவது சந்தோஷமாகச் செலவிடுங்கள் என்று கூறிவிட்டார். அவரே டில்லியிலுள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் கூடியிருந்த கூட்டத்துக்கு வந்து அவர்களோடு அன்று குதூகலமாக ஆடி விளையாடிக் களித்தார். ஆமாம்; நேருவுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
311784 ★

"யுகிவாரிஸு என்ற ஜப்பானியப் படத்தைக் காண்பிக்கப் போகிறோம். நீங்கள் அவசியம் வரவேண்டும்" என்று போன் வந்தது. இதென்ன, வாயில் நுழையாத பெயராக இருக்கிறதே என்று முதலில் தோன்றியது. பிறகுதான் இது சர்வ தேச பிலிம் விழாவின்போது சென்னைக்கு வந்த படம் என்பது ஞாபகத்துக்கு வந்தது. எனவே போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான் என்று புறப்பட்டேன். படம் பார்த்த அந்த இரண்டு மணி நேரமும் நான் தியேட்டரிலேயே இல்லை. கதை நிகழ்ந்த ஜப்பான் நாட்டிலேயே இருந்தேன். படம் முடிந்த பிறகு தான், ஆகா, இது தியேட்டர் அல்லவா என்ற ஞாபகம் வந்தது.

படத்தில் பிரதான பாகத்தில், நடித்தவர் யார் தெரியுமா? நாலே நாலு வயசுள்ள ஒரு ஜப்பானியச் சிறுவன்தான். படத்திலேயே மொத்தம் நாலு பேரைத்தான் நாம் பார்க்கிறோம். படத்தில் ஜப்பானியச் சிறுவர்களின் ஒழுங்கான முறையைப் பார்க்கிறோம். களங்கமற்ற பேச்சு, சிரிப்பு, தைரியம், விளையாட்டு, அஞ்சாத நெஞ்சம் எல்லாவற்றையும் அந்தச் சிறுவன் மூலம் பார்க்கிறோம்.

அவன் தாய் சீக்காளி; அவனை, அவன் சிற்றன்னையின் வீட்டுக்குப் போய் இருக்கச் சொல்கிறாள். அவன் தந்தையும் சிற்றன்னையும் அவனைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பி அவள் ஆஸ்பத்திரியில் சேரப் போய்விடுகிறாள். தன் கணவனுக்கு இன்னொரு மனைவி மூலம் இப்படி ஒரு குழந்தை உண்டு என்பது அந்தச் சிற்றன்னைக்குத் தெரியாது. கணவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டான் என்று சிறுவனிடம் வெறுப்புக்கொள்ள முயலுகிறாள். ஆனால் சிறுவனின் பேச்சும் விளையாட்டும் அவளைக் கவர்ந்துவிடுகின்றன. பிறகு அவன் தந்தை யுத்தத்திலிருந்து திரும்பி வருகிறார். வந்ததும் கணவனிடம் மனைவி கோபித்துக் கொள்கிறாள். இதைப் பார்த்த சிறுவன் தன்னால்தானே இவர்களுக்குள் சண்டை என்று எண்ணி, ரெயில்பாதை வழியாகத் தாயிடம் போகப் புறப்படுகிறான். பின்னால் ரெயில் வருகிறது. அவனோ திரும்பிப் பார்க்காமல் நடக்கிறான். முட்டித் தள்ளும் சமயம். அவனையும் பின்னாலேயே வந்த சிற்றன்னையையும் தந்தை ஓடிவந்து காப்பாற்றுகிறார். பிறகு சந்தோஷமாக இருக்கிறார்கள். கதைச் சுருக்கம் இதுதான்.

அன்று என்னோடு பல சிறுவர் சிறுமியரும் படத்தைப் பார்த்தார்கள். ஜப்பானிய மிருகக் காட்சிச் சாலையைக் காட்டும்போதும், விளையாட்டுச் சாமான்கள் பின்னணிச் சங்கீதத்துடன் நாட்டியமாடும் போதும் அந்தச் சிறுவன் கோபித்துக் கொள்ளும்போதும் தியேட்டரே அதிரும்படி ஒரே சிரிப்புத்தான். சாதாரணமான ஒரு கதையை நாலே வயதான சிறுவனை வைத்துக்கொண்டு அற்புதமான படமாக ஜப்பானியர்கள் எடுத்திருக்கிறார்கள்.

குழந்தைகளோடு பெற்றோரும் மற்றவர்களும் அவசியம் பார்க்க வேண்டிய படம் இது என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

29. தம்மம்பட்டி	உபதலைவர்: T. அனந்தகிருஷ்ணன் பொருளாளர்: M. V. தண்டபாணி செயலாளர்: R. சுப்பிரமணியன் வா-நிர்வாகி: M. சீனிவாசன்

பதினேழு அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப் ட்டிருக்கிறது. 'வள்ளுவன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் பாட்மிண்டன் கிரிக்கெட் விளையாட்டுக் கிளப்புகளும் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.

ஆத்தூர் தாலுகாவிலுள்ள மற்றக் கிரிக்கெட் கோஷ்டிகள் டோர்னமெண்டு'க்கு ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை யில் வரலாம். விலாசம்: 95, கடைவீதி, தம்மம்பட்டி என்பது.

30. பெரம்பலூர்	உபதலைவர்: ராமசந்திரன் பொருளாளர்: லைனல் சாமிநாதன் செயலாளர்: கண்ணன் வா-நிர்வாகி: ஜேசன் சாமிநாதன்

12 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட் டிருக்கிறது.

* • *

கரூரில் உள்ள கழக அங்கத்தினர்கள் கிளைக் கழகம் ஸ்தாபிக்க, K. ராமன், 18, பெருமாள் கோயில் தெரு என்ற விலாசத்தில் சந் க்கவும்.

கும்பகோணத்தில்: R. ஜகந்நாதன், 130, பெரிய தெரு.

பேராக்கில்: ஆசைத்தம்பி, 589, வாக்கர் ரோடு, தைப்பிங், மலாயா.

புதுக்கோட்டையில்: S. சீனிவாசன், I யூனிவர்ஸிடி கிளாஸ், 'B' H. H. ராஜா காலேஜ், புதுக்கோட்டை.

கடலூரில்: R. முரளீதரன், 93, மெயின் ரோடு, புதுப்பாளையம்.

பார்க் டவுன், ஜார்ஜ் டவுன் ஆகிய இரண்டு இடங்களிலும் ள்ள அங்கத்தினர்கள், N. S. சேஷாத்திரி, 2/3, ஹனுமந்தராயன் காயில் சந்து, சென்னை-3 என்ற விலாசத்தில் சந்திக்கவும். pp மைசூர் கேப்)

பேனா நண்பர்கள்

1. K. C. S. குகானந்த சர்மா, (G. 92) புன்னாலைக் கட்வான், ன்னாகம், சிலோன்.

2. S. ராஜாமணி, 52-A, பாண்டியன் அகில் சந்து, திண்டுக் ரோடு, மதுரை.

3. V. கிருஷ்ணமூர்த்தி, 80, முண்டகக்கண்ணியம்மன் கோயில் , மயிலாப்பூர், சென்னை-4.

4. K. வெங்கடரமணி, நித்தியவனம், சீர்காழி (P. O.) தஞ்சாவூர் லா.

Reg. No. M. 3.

அகில இந்திய காதி, சுதேசி,
கைத்தொழில் பொருட்காட்சி
தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்

★

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

★

ஸ்டால் No. 165

— நாடக அரங்கிற்கு அருகில் —

★

குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரையில்
குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அவசியம்
வாங்க ப அரிய தமிழ்ப் புத்தகங்கள்.

அறிவுத் தெய்வத்தின் சின்னம் கலைம